DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
RE/MAX
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1438 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 27, 2023

# Grand Musical Show in Whitby presented by Latika Gold House on 21-10-2023 was very successful

# லத்திக்கா கோல்ட் ஹவுஸ் நகை மாளிகையினர் நடத்திய "இசை வெள்ளம்" இசை நிகழ்ச்சி வெற்றி விழாவாகத் திகழ்ந்தது



கடந்த சனிக்கிழமை -21-10-2023 அன்று **Whitby** நகரில் உள்ள அழகிய மண்டபம் ஒன்றில் ஸ்காபுறோ லத்திக்கா கோல்ட் ஹவுஸ் நகை மாளிகையினர் நடத்திய "இசை வெள்ளம்" மாபெரும் இசை நிகழ்ச்சி வெற்றி விழாவாகத் திகழ்ந்து இசை ரசிகர்களின் பாராட்டுக்களையும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு தேடிக்கொடுத்தது.

(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)



## பாடகர் சிற் ஸ்ரீராமின் இசை நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை 27– 10– 2023 மாலை ரொறன்ரோ மாநகரில் உள்ள "கொக்கோ கோலா" அரங்கில் நடைபெறுகின்றது

உலகெங்கும் வாழும் இளைய தலைமுறை இசை ரசிகர்களை தனது காந்தக் குரலால் கவர்ந்து தொடர்ந்தும் அனைவரது மனங்களில் நிறைந்துள்ள தமிழ்த் திரை உலகின் பாடகர் சிற் ஸ்ரீராமின் முழு நீளை இசை நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை 27-10-20230 அன்று ரொறன்ரோ மாநகரில் உள்ள பிரமாண்டமான "கொக்கோ கோலா" அரங்கில் நடைபெறுகின்றது.



கடந்த செவ்வாய்கிழமை மாலை ரொறன்ரோ விமான நிலையத்தில் வந்திறங்கிய பாடகர் சிற் ஸ்ரீராமை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவரான சங்கர் நல்லதம்பி தனது புதல்வி தாமிரா இணைந்து வரவேற்பதையும் காணலாம்.

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

BIG BILLYARD INSURANCE GROUP
Great Coverage.
BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு, வர்த்தக ஸ்தாபனங்கள் வாங்க விற்க அல்லது அவற்றின் பெறுமதிய சட்டப்பூர்வமாக மதிப்பிட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ள (Appraisal Report) 24 வருட அனுபவம் வாய்ந்த என்னை அழையுங்கள்.
S.K. Bales (Broker) MVA (Market Value Appraiser), FRI, CRES
email: skbales@hotmail.com
Bus: 416-270-1111 Cell: 416-801-3219
3-1286 Kennedy Road , Toronto ON M1P 2L5
RE/MAX ACE REALTY INC., BROKERAGE

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com




# எமது ஈழத் தாய் மண்ணின் வீணை இசையின் அடையாளமாகத் திகழும் என். எஸ். வாசீகன் அவர்கள் கனடாவில் தன் முதலாவது மேடை நிகழ்ச்சியை அளிக்கவுள்ளார்

கனடிய செய்திகள் Canadian News




எதிர்வரும் நவம்பர் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கனடாவின் “விழித்தெழு பெண்ணே” அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மாலை 6.00 மணிக்கு ஸ்காபுறோவில் உள்ள சீனக் கலாச்சார நிலையத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ள “வீணை இன்னிசை மாலை” நிகழ்ச்சியில் வீணை இசை மழை பொழியவுள்ளார்.

அவருக்கு பக்கவாத்திய இசை வழங்க கனடாவின் புகழ்பெற்ற இசைக்குழுவான “மொகா ரியுனர்ஸ்” குழுவினர் ஆயத்தமாக உள்ளனர். அத்துடன் கடுமையான பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

வீணை இசைக் கலைஞர் என். எஸ். வாசீகன் அவர்கள் கனடாவிற்கு இசைக் கச்சேரி வழங்க வந்துள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

இதற்கு முன்னர் உலகில் தமிழர்கள் புலம்பெயர்ந்து நாடுகளில் முக்கியமான தளங்களாக விளங்கும் இங்கிலாந்து. அவுஸ்த்திரேலியா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றிலும் ஈழத் தமிழர் அமைப்புக்களால் அழைக்கப்பெற்று பல இசை நிகழ்ச்சிகளை நடத்திய பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றவர் ஆவார்.

இலங்கையின் உயர் கல்வி அமைச்சின் கீழ் இயங்கிவரும் கர்நாடக சங்கீத பாடத்திட்டங்கள் மேற்பார்வை செய்யும் குழு உறுப்பினராக கடந்த பல வருடங்களாக நிரந்தரமாக பணியாற்றி வருகின்றவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

வீணை இசைக் கலைஞர் என். எஸ். வாசீகன் அவர்கள் இலங்கையில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கொழும்பு இந்துக்கல்லூரி மற்றும் மவுன்லெவேணியா சென் தோமஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் என்பதும் தொடர்ந்து தென்னிந்தியா சென்று அங்கு புகழ்பெற்ற வீணை வித்துவான்களிடம் வீணை இசையைப் பயின்று தேர்ச்சி பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் நவம்பர் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கனடாவின் “விழித்தெழு பெண்ணே” அமைப்பின் ஏற்பாட்டில் மாலை 6.00 மணிக்கு ஸ்காபுறோவில் உள்ள சீனக் கலாச்சார நிலையத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ள “வீணை இன்னிசை மாலை” நிகழ்ச்சிக்குத் தேவையான அனுமதிச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ள (416) 677-5511 அல்லது (416) 732-1608 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.





Canada
We acknowledge the financial support of the Government of Canada

## உதயன் கதிரோட்டம்

# இலங்கையில் பெற்ற இலவசக் கல்வியால் உலகெங்கும் வலிமையுடன் விசாலித்திருக்கும் கல்வியாளர்களின் கவனத்திற்கு...

இலங்கையில் இலவசக் கல்வி என்பது ஒரு 'பெருங்கொடையாக' அமைந்து இலட்சக் கணக்கான ஏழைக்குடும்பங்களின் பிள்ளைகளை கல்வியின் உச்சத்திற்கு கொண்டு சென்ற ஒரு காலம் இருந்தது. அந்தக் காலப் பகுதியில் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பெற்ற இலவசக் கல்வியால் தலை நிமிர்ந்து வாழும் எத்தனையோ கல்வியாளர்களையும் வெற்றியாளர்களையும் நாம் இன்றும் காண்கின்றோம்.

அவர்களில் பலர் உலகெங்கும் சென்று உயர் பதவிகளில் அமர்ந்திருந்து தங்கள் குடும்பத்தினரையும் உறவினர்களையும் அதுமட்டுமல்லாது தாம் சார்ந்த ஊரவர்களையும் உயர்த்தி மகிழ்ச்சியடையும் காட்சிகள் ஏராளம் நாம் கண்டு இறும்பூதெய்கின்ற விடயங்களாக உள்ளன.

ஆனால் தற்போது கல்வியைப் பொறுத்தளவில் மனதில் கவலை-யை தோற்றுவிக்கும் விபரீதங்களின் வடிவங்களாக. புதிதாக தனியார் பல்கலைக்கழகங்கள் முளைவிடுகின்றன. அவை அத்தனையும் வெளிநாட்டு மூலதனங்களோடு அங்கு எழுந்து நிற்க திட்டங்கள் தீட்டப்படுகின்றன. வெளிநாட்டுப் பல்கலைக்கழகமொன்றுடன் இணைக்கப்பட்டதாக இப்பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. கொழும்பு மற்றும் அதனை அண்டிய பெருநகரப்பகுதிகளிலேயே இப்பல்கலைக்கழகங்கள் அதிகளவில் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களில் பெருமளவான மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அவர்களில் அதிகமானவர்கள் செல்வந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களாவர். பணவசதியற்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களிலும் சிறிய தொகையினர் தனியார் பல்கலைக்கழகங்களில் கற்று வருகின்றனர். நடுத்தர வசதியுள்ள பெற்றோர் தங்கள் வசமுள்ள காணிகளை விற்றாவது தமது பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் தனியார் பல்கலைக்கழகங்களில் சேர்த்து விடுகின்றனர்.

ஆனால் இங்கே மற்றொரு சிக்கலும் உருவாகுவதற்கு இடமிருக்கின்றது.
தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டு செல்லுமானால், அவர்கள் அத்தனை பேரையும் உள்வாங்கிக் கொள்வதற்கு இலங்கையில் தனியார் நிறுவனங்கள் கிடையாது. தனியார் தொழில்நிறுவனங்களைப் பொறுத்தவரை எமது நாடு இன்னுமே குறிப்பிடும்படியான முன்னேற்றம் அடையவில்லை என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

ஆகவே தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்று வெளியேறுகின்ற மாணவர்களின் தொழில்வாய்ப்பென்பது எதிர்காலத்தில் சிக்கலானதாகவே மாறப் போகின்றதென்பதுதான் உண்மை. ஆனாலும் இந்த மாணவர்களுக்கு மற்றொரு சிறந்த எதிர்காலம் உண்டென்பதையும் மறுப்பதற்கில்லை.

தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கான சந்தர்ப்பம் இன்னும் குறையாமல் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் அரசாங்க நிறுவனங்களைப் பார்க்கிலும், தனியார் நிறுவனங்களே அதிக வினைத்திறனுடன் இயங்கி வருகின்றன. அந்நிறுவனங்களைப் பொறுத்தவரை அரசாங்கப் பல்கலைக்கழகமா அல்லது தனியார் பல்கலைக்கழகமா என்பது முக்கியமல்ல.

பட்டம் பெற்றுள்ள மாணவர்களின் ஆற்றலும் வினைத்திறனுமே அந்நிறுவனங்களுக்கு அவசியமாகின்றன. தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற மாணவர்கள் பலர் வெளிநாடுகளிலுள்ள தனியார் நிறுவனங்கள் பலவற்றில் அதிக வேதனத்தில் தொழில் புரிந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை நாளும் பொழுதும் பல்கிப்பெருகி வருகின்றது. க. பொ. த உயர்தரம் சித்தியடைகின்ற மாணவர்களில் அத்தனை பேரையும் உள்வாங்கிக் கொள்வதற்கு இலங்கையிலுள்ள அரசாங்க பல்கலைக்கழகங்களில் இடம் கிடையாது. க.பொ.த உயர்தரம் சித்தியடைந்தோரில் அரசாங்க பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களின் நிலைமை உண்மையிலேயே பரிதாப-மானது.


பணவசதி உள்ளோர் தனியார் பல்கலைக்கழகங்களை நாடுகின்றனர். இன்றைய நவீன உலகின் தொழில்சந்தையைக் கண்டறிந்து, அதற்கான பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு இவர்களால் முடிகின்றது. நான்கு வருட கால கற்கைநெறிக்காக அவர்கள் பில்லியன்கணக்கான ரூபா பணத்தைச் செலவிட வேண்டியிருக்கின்றது. உயர்கல்வி கற்று உயர்தொழில் புரிய வேண்டுமானால் பணத்தைச் செலவிடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு மார்க்கம் இல்லை என்பதுதான் உண்மை.

இவற்றையெல்லாம் வைத்து நோக்குகின்ற போது, கல்வி என்பது இலங்கையில் இக்காலத்தில் பணம் சம்பந்தப்பட்டே காணப்படுகின்றது.. இலவசக்கல்வியானது அருகிச் செல்வதாகவும், பணம் செலுத்திக் கற்கும் கலாசாரம் உயர்ந்து செல்வதாகவும் கருதுவதற்கு இடமுண்டு. அவ்வாறானால் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் எதிர்காலம் என்ன என்ன வினா இங்கே எழுகின்றது. இது பரிதாபமான விடயம் ஆகும். புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் இதற்கு பதில் வைத்திருக்கின்றார்கள் என்று பார்ப்போம்!

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்
உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers
EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,
Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# மட்டக்களப்பு தேரரை ICCPR சட்டத்தின் கீழ் கைது செய்யுங்கள் அல்லது அங்கொடையில் அடையுங்கள் — மனோ கணேசன் எம்பி





மட்டக்களப்பு அம்பிட்டிய சுமனரத்தின தேரர், தெருச்சண்டியனாக மாறி, "தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன்" என்று மன நோயாளி போல் நடுத்தெருவுக்கு வந்து கதறுகிறார். இவரை ஒன்றில் **ICCPR** சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அல்லது பிடித்துக்கொண்டு போய் அங்கொடையில் அடைக்க வேண்டும். ஜனாதிபதியை தூற்றிய ராஜாங்கன தேரரை, போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை, நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவை, **ICCPR** சட்டத்தின் கீழ் ஜனாதிப-தியின் அரசு கைது செய்தது. இன்று தமிழ் மக்களை கொல்லுவேன்,வெட்டுவேன் என்று பகிரங்கமாக கொலைவெறி கூச்சல் எழுப்பும் இவரை ஜனாதிபதியின் அரசு கைது செய்யாதா என கேட்க விரும்புகிறேன். எல்லாவற்றையும் கடந்து செல்வதைப்போல் ஜனாதிபதி ரணில் இதையும் கடந்து போக முயற்சிக்க கூடாது என ஜனநாயக மக்கள் முன்னணி, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி தனது முகநூல், எக்ஸ் சமூக ஊடகங்களிலும் கருத்து கூறியுள்ள மனோ கணேசன் எம்பி மேலும் கூறியதாவது, அம்பிட்டிய சுமனரத்தின தேரருக்கு தனது தாயின் கல்லறை தொடர்பில், மட்டக்களப்பு மாவட்ட எம்பிக்களுடன் அல்லது மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளருடன் ஏதும் பிரச்சினை இருக்குமாயின், அவை பற்றி அவர் பொலிசில் புகார் செய்ய வேண்டும். மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் இதை கலந்து பேசும்படி மட்டக்களப்பு மாவட்ட செயலாளரை கடிதம் மூலம் கோர வேண்டும். அடுத்த ஒருங்கிணைப்பு குழுக்கூட்ட நிகழ்ச்சி நிரலில் இதை இடம்பெற செய்து, பேசி தீர்த்துக்கொள்ள வேண்டும். இதுதான் சட்டப்படியான நாகரீக நடைமுறை. இதைவிடுத்து சண்டியன் மாதிரியும். மனநோயாளி மாதிரியும் நடுதெருவுக்கு வந்து, "தமிழர்களை துண்டு துண்டாக வெட்டுவேன், கொல்லுவேன், தெற்கில் வாழும் தமிழரை கொல்லுவேன்" என்றி ஹிஸ்டீரியாகாரனாக கத்துவது எந்த வகையில் நியாயம்?

**ICCPR** சட்டத்தின் கீழ் ஜனாதிபதி தன்னை தூற்றிய ராஜாங்கன தேரரை கைது செய்தார். இன்று தமிழ் மக்களை கொல்லுவேன்,வெட்டுவேன் என்று பகிரங்கமாக கூறும் இவரை கைது செய்ய மாட்டாரா என கேட்க விரும்புகிறேன். தமிழ் ஊடகங்களை அழைத்து, தமிழில் மொழிமாற்றி சொல்லுங்கள் என்றே ஆணவத்திமிருடன் கூறும் இவரை கைது செய்ய மாட்டாரா என கேட்க விரும்புகிறேன். அல்லது இவர் ஒரு மனநோயாளி என அங்கொடையில் அடைத்து விடுங்கள்.

சில காலம் முன் ஜெரோம் பெர்னாண்டோ என்ற ஒரு போதகரையும், நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய ஆகியோரை கைது செய்ய முடியுமானால், ஏன் இவரை கைது செய்ய முடியாது? பார்க்கப்போனால், ஜெரோம் பெர்னாண்டோ, நடாஷா எதிரிசூரிய ஆகியோர் பேசிய பேச்சுகளை விட இவரது பேச்சு ஆயிரம் மடங்கு மோசமானது.

இன்று இந்த அம்பிட்டிய சுமனரத்தின தேரரின் மட்டக்களப்பு விகாரையை நடத்த இலங்கை ராணுவம் உதவுகிறது. நாட்டின் இராணுவம் இவருக்கு சோறாக்கி சாப்பாடு போடுகிறது. இவை பற்றிய தகவல்கள் எனக்கு கிடைத்துள்ளன. மக்களின் வரிப்பணத்தில் சாப்பிடும் இவர் பல ஆண்டுகளாகவே இப்படி துவேசமாக பேசி வருகிறார். பொலிஸ் அதிகாரிகளின் கன்னத்தில் அடிக்கிறார். பொலிஸ் அதிகாரிக-ளின் சட்டையை பிடிக்கிறார். பொலிஸ் அதிகாரிகளின் தொப்பியை தட்டி விடுகிறார். மாற்று மத போதகர்களின் கன்னத்தில் அடிக்கிறார். அரச அதிகாரிகளை கெட்ட வார்த்தைகளில் திட்டுகிறார். அப்படியானால், இவர் யார்?

**வேலை வாய்ப்பு**
**Cook and Kitchen Help Wanted**

**Cobourg** நகரத்திலும் **Downtown Toronto** விலும் அமைந்துள்ள கனடிய உணவகங்களுக்கு **Cook** மற்றும் **Kitchen Help** ஆகியோர் உடனடியா-கத் தேவைப்படுகின்றார்கள். அனுபவம் விரும்பத்தக்கது. **Cobourg** நகரத்தில் வேலை செய்ய விரும்புவர்களுக்கு தங்குமிடம் மற்றும் போக்குவரத்து ஆகியன வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு:-
*416 294 7887*

**முதியவர் ஒருவரை பராமரிக்க பெண் தேவை**

**MARKHAM & SHEPPARD**
பகுதியில் முதியவர் ஒருவரைப் பராமரிப்பதற்கும் சமைத்துக் கொடுப்பதற்கும் பெண் ஒருவர் அல்லது
**Middle age couple**
தேவை. தங்குவதற்கு அறையும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 437-553-9705

**DISWASHER தேவை**

**14th Ave./ Birchmount** சந்திக்கு அருகில் உள்ள கனேடிய உணவகத்திற்கு **DISWASHER** ஒருவர் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு :
**NICK - 905 477 1161**

**ஸ்காபுறோவில் Saree Blouse Cutting Classes**

இலங்கையில் தையல் துறையில் பலவருட அனுபவமுள்ள பெண் **(Tailor)** ஒருவரினால் நியாயமான விலையில் சேலைக்கு சட்டை **(Saree Blouse)** தைத்துக் கொடுப்பதோடு, சேலைக்கு சட்டை தைப்பதற்கான வகுப்புகளும் **(Saree Blouse Cutting / Classes Ellesmere** - மற்றும் **Scarborough** நகரிலும் **(Centennial/ Community Centre - Markham & Ellesmere - 1967 Ellesmere Road)**லும் நடத்தப்படுகின்றது.
ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்:
தர்மா - 437-833-2660 905-268-0272

கனடிய செய்திகள்
Canadian News

# தமிழகம் செய்யத் தவறியதை ரொறன்ரோவில் இயங்கும் "தமிழ் இலக்கிய தோட்டம்" தனது பணியாக மேற்கொண்டு வருகின்றது

## கனடா உரையரங்கில் தமிழகத்தின் நட்சத்திர எழுத்தாளர் ஜெயமோகன் புகழாரம்




"இந்த நகரத்திற்கு இன்னொரு தனிச் சிறப்பும் உள்ளது. அது தமிழகத்துக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு. அதாவது ரொறன்ரோ "தமிழ் இலக்கிய தோட்டம் அமைப்பு" அது வருடா வருடம்ட வழங்கிவருன்ற "தமிழியல் விருது சிறப்பையும்" தனித் தன்மையையும் கொண்டது. ஜெயமோகன் எடுத்துரைத்தார்.

எமது மொழியின் முக்கிய படைப்பாளிகளை இனம் கண்டு இலக்கியத் தோட்டம் கௌரவித்து வருவது தனிச் சிறப்பாகும். தமிழகம் செய்யத் தவறியதை இலக்கிய தோட்டம் தனது பணியாக மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பணியினை பதிவிட வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது. ஏனெனில் இத்தகைய தொடர்ச்சியான கௌரவ நிகழ்வுகள் மிக அரிதாகவே நடைபெறுவதொன்றாகும். இவ்வேளையில் தமிழியல் விருது பெற்ற சுந்தரம் இராமசாமி வெங்கட் சுவாமிநாதன் போன்ற எனது முன்னோடிகளை நான் இங்கு நினைவு கூறுகின்றேன். தமிழகத்தில் கொரவம் பெற வேண்டிய பல படைபபாளிகள் தமக்குரிய கௌரவத்தைப் பெறாமலே மறைந்து போயுள்ளனர் என்ற ஆதங்கத்தையும் பகிர்ந்து கொள்வது கூட இங்கு அவசியமாகிறது".

இவ்வாறு தமிழகத்தின் நட்சத்திர எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் கடந்த சனிக்கிழமையன்று மார்க்கம் நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற உரையரங்கின் ஆரம்பத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார். "ரொறன்ரோ தமிழிலக்கியத் தோட்டம்" ஏற்பாடு செய்த இந்த உரையரங்கில் எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் "தமிழ் இலக்கியத்தில் அறம்" என்ற தலைப்பில் உரையாற்றினார். உரைக்கு முன்னதாக எழுத்தாளர் ஜெயமோகன் பற்றிய அறிமுகத்தை மருத்துவர் ரகுராமன் அவர்கள் "சுவையுடன்" வழங்கினார்.

அங்கு உரையாற்றிய எழுத்தாளர் ஜெயமோகன் தொடர்ந்து தனது உரையில் பின்வரும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

"இளம் எழுத்தாளனாக இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவுக்கு வெளியே நான் வந்திறங்கிய முதலாவது நகரம் ரொறன்ரோ ஆகும். அவ் வேளையில் இந்த நகரத்தின் ஒவ்வொரு காட்சியும் பெரும் விந்தையாக ஒரு புதிய உலகத்துக்கான திறவுகோலாக அமைந்தது.

எனது இந்த முதல் வெளிநாட்டுப் பயணம் ஜிம்காட்டன் என்னும் தேநீர் அருந்து உணவகத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது. அங்குதான் ஒரு சில இலக்கிய நண்பர்களான அ. முத்துலிங்கம். செல்வம் ஆகியோரோடு சந்திப்பு நிகழ்ந்தது.

இலக்கிய நண்பர்களுடனான சந்திப்பை ஒரு ஹோட்டலில் அமர்ந்து நடத்தலாம் என்பதும் ஒரு உணவரங்கில் இரண்டு மணித்தியாலங்கள் பேசலாம் என்பதும் ஆச்சரியமானதும் அற்புதமானதுமான விடயமுமாகும். அத்தகைய அனுபவத்தை ரொறன்ரோ நகரம் தந்தது. தமிழக ஹோட்டல்களில் இவ்வாறான சந்திப்புக்களை ஹோட்டல்களில் நடத்துவதோ நீண்ட நேரம் பேசிக் கொண்டிருப்பது என்பதெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விடயமாகும் என்று தமிழக எழுத்தாளர் ஜெயமோகன் தனது உரையின் ஆரம்பத்தில் பகிர்ந்து கொண்டார்.

இன்றைய இந்தச் சந்திப்பில் தமிழ் இலக்கியத்தில் அறம் என்ற தலைப்பிலேயே உரையாற்ற உள்ளேன்.

இந்த முறை ரொறன்ரோ நகரத்துக்கான பயணத்தின் உளப் பதிவு குறித்து நண்பர்கள் கேட்பதாகக் குறிப்பிட்ட ஜெயமோகன் அத்தகைய பதிவு பற்றிக் குறிப்பிடுகையில், இந்தமுறை ரொறன்ரோவிலும் ஏனைய இடங்களிலும் நான் சந்தித்த நண்பர்களின் குழந்தைகள் குறிப்பாக பதினைந்து வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளின் இலக்கியம் தொடர்பான கேள்விகளே உளப் பதிவுகளாக அமைந்தன என்று ஆரம்பித்தார்.

இந்தக் குழந்தைகளுடனான மிகத் தீவிரமான முக்கியமான இலக்கியம் சார்ந்த உரையாடல்களில் அந்தக் குழந்தைகள் முன் வைத்த கேள்விகள்தான் எனவும் ஜெயமோகன் தெரிவித்தார்.

இந்தக் குழந்தைகள் தமிழ் இலக்கியத்தைப் படிக்கின்றனர். தாம் கற்ற இலக்கியப் படைப்புக்களை சமகால ஆங்கில மொழியில் மொழி பெயர்க்க முற்படுகின்றனர். அவ்வேளையில் அது சார்ந்த பல கேள்விகள் அவர்களுக்கு எழுகின்றன. அந்தக் கேள்விகள் அனைத்துமே மிகச் சிறந்த கல்வி அறிவுள்ள தேசத்தில் கல்வி பயிலும் குழந்தைகளின் முக்கியமான கேள்விகளாக உள்ளன என்று ஜெயமோகன் சுட்டிக் காட்டினார்.

தமிழ் மொழியில் இருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கும் போது பண்பாட்டு சமகாலத் தன்மையைக் கண்டறிய வேண்டுமா அல்லது பண்பாட்டு தனித் தன்மையை அப்படியே கொண்டு வர வேண்டுமா என்று எனது நண்பரின் குழந்தை வினவியது.

சரியாகச் சொல்ல முடியாது. ஆனால் யாருக்காக மொழி பெயர்க்கின்றாய் என்பதைப் பொருத்தது. ஒரு பிரபல படைப்பை மொழி பெயர்ப்பதாயின் அதற்கு பண்பாட்டு சமகால தன்மையைக் கண்டறிய வேண்டும். அதே வேளையில் இன்னொரு மொழியின் பண்பாட்டு நுட்பங்களுடன் மொழி பெயர்க்கப்பட வேண்டும் எனப் பதிலளித்ததாகக் குறிப்பிட்டார்.

சுந்தரம் இராமசாமியின் படைப்புக்கள் அதன் பண்பாட்டு பண்புகளை விட்டுவிட்டுபொது மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஆனால், துருக்கிய நாவலொன்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு துருக்கிய மொழியில் வாசிப்பது போன்றுள்ளது.

இது ஒரு முக்கியமான தருணம். இந்தக் குழந்தைகளின் கேள்விகள் சாதாரணமானவை அல்ல. குழந்தைகளுக்கு மாத்திரம் அல்ல பெற்றோருக்கும் இது முக்கியமான தருணம்.

எனது நண்பனின் பன்னிரண்டு வயது பெண் குழந்தையின் கேள்வி இது.

தமிழ் இலக்கியம் தமிழர் பண்பாடு என்பன உயர்வானதென எனது அப்பா கூறுகின்றார். ஆனால் நான் வாசித்ததில் பெண்கள் தமிழ் இலக்கியத்தில் உயர்வாகச் சொல்லப்படவில்லை. வள்ளுவர் கூட பெண்களைப் பற்றி இழிவாகவேக் கூறுகின்றார் என்று எனக்குத் தோன்றுகின்றது என்று அந்தக் குழந்தை கூறியது.

இன்னொரு குழந்தையின் கேள்வி இது.

சங்க காலத்திலும் கம்பராமாயண காலத்திலும் சாதி முறைகள் இருந்தனவா என்று என்னிடம் கேள்வி எழுப்பியது.

சாதி முறைகள் இருந்தன என்று பதில் அளித்தேன்.

அப்படியானால் நீதிபற்றிப் கேட்பதற்கு அவர்களுக்கு தகுதி உண்டா என்று கேள்வி எழுப்பிய அந்தக் குழந்தை அறம்பற்றி அவர்கள் பேசலாமா என்றும் கேள்விகளை முன் வைத்தது.

இருந்தது என்றே நான் பதில் அளித்தேன்.

அதற்ககு அந்த குழந்தை அவர்கள் எழுதிய நீதி நூல்கள் இலட்சிய சமூகம்.மற்றும் அறம் குறித்த நூல்களை நான் ஏன் பள்ளிக்கூடத்தில் பாடப் புத்தகங்களில் படிக்க வேண்டும் என்ற வினாவையும் அந்தக் குழந்தை தொடுத்தது.

இந்தக் குழந்தைகளின் கேள்விகளுக்கு விரிவான பதிலை அளித்தேன். குழந்தைகளின் இது போன்ற கேள்விகளுக்கு இல்லாத பதிலைத் தேட வேண்டியுள்ளது.

குழந்தைகளின் இவ்வாறான கேள்விகளுக்கு வழங்கும் பதில்களிலேயே அவர்களுக்கும் எமக்கும் இடையிலான உறவு தங்கியுள்ளது. அது இன்னும் நெருக்கமாகின்றது.

தமிழ் இலக்கியத்தில் அறம் இருந்ததா? இல்லையா என்பதற்கு ஆம் அல்லது இல்லை என்ற பதிலே வழங்க வேண்டும். அந்த பதில் தமிழ் இலக்கியத்தில் அறம் இருந்தது என்பதற்கு வரலாற்று கலாசார பரிணாமமாக சொல்லி இருந்தால் அந்த பதில் உண்மையாகும்.

ஒரு கொள்கை அல்லது வாழ்க்கை முறை அல்லது நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டு அவை ஒன்றல்ல பல படி நிலைகளுக்கூடாக வளர்ந்து வரும் ஒரு பகுதியில் பெரும் வளர்ச்சி மறு பகுதியில் தேக்ன நில ஏற்படும்.

சங்க காலத்தில் சாதி இல்லை பேதமில்லை பெண் அடிமைத்தனமில்லை. எல்லாமே மிகச் சிறப்பாக இருந்த இலட்சிய சமூகம். கடவுளின் ஆசிபெற்ற அல்லது கடவுளின் ஒளிவட்டம் பட்டுத் தெறிக்கின்ற காலமாக சங்க காலம் இருந்தது. ஆனால் நாம் வாழும் காலம் அவ்வாறு இல்லை" என்று எழுத்தாளர் ஜெயமோகன் தெரிவித்தார்.



தொடர்ந்தும் அவர் த மி ழி ல க் கி ய த் தி லு ம் சங்க இலக்கியங்களிலும் அறம் காணப்பட்ட சந்தர்ப்பங்களை சான்றுகளுடன் எடுத்துரைத்தார். அவர் உரையாற்றிக் கொணடிருக்கையில் நான் ஒன்றை நினைத்துக்கொண்டேன். "ஜெயமோகன் அவர்கள் தனது படைப்பிலக்கியத் தளத்தில் அறம் பற்றிய அவசியத்தை தனது நெறியாகக் கொண்டு எழுத்துக்களைப் படைப்பதனால் தானோ அவர் வெற்றி பெற்றவராகப் போற்றப்படுகின்றார்" என்று.

தொடர்ந்து எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள் சபையோர் மத்தியிலிருந்து எழுந்த கேள்விகளுக்கும் அழகுற பதிலளித்து சபையோரின் பாராட்டுக்களையும் கரகோசத்தையும் பெற்றுக்கொண்டார்.

**- ரொறன்ரோவிலிருந்து சத்தியன்**

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள் Sri Lanka News

# காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களை தெளிவு படுத்தும் கலந்துரையாடல் கிளிநொச்சியில்



கிளிநொச்சி மாவட்டத்தில் வனவளத் திணைக்களத்தின் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்களை தெளிவுபடுத்தும் கலந்துரையாடல் ஒன்று, கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளர் இளங்கோவன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் ,அங்கஜன் இராமநாதன், மற்றும் வனவள திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள நான்கு பிரதேச செயலாளர்கள் என பலர் கலந்து கொண்டு காணிகளை விடுவிக்கும் முயற்சிகளின் சமகால நிலையை ஆராய்ந்தனர்.

அதிகாரிகள் தரப்பிலிருந்து ஜனாதிபதியின் வட மாகாணத்திற்கான செயலாளர் இளங்கோவன் காணி, வனபரிபாலன திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

போருக்கு பிந்திய நிலையில் மக்களின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக காணிகள் அவசியமாக தேவைப்படும் நிலையில் இக் காணிகளை விடுவித்து மக்கள் பாவனைக்காக கையளிப்பது துறைசார் திணைக்கள அதிகாரிகள் பொதுமக்கள் எதிர் கொண்டு வரும் பல்வேறு சிரமங்கள் நெருக்கடிகள் இச் சந்திப்பில் ஆராயப்பட்டன.

இதில் வனபரிபாலன உத்தியோகத்தர்களின் இறுக்கமான நடைமுறையால் அதிகாரிகள் மீதும் கூடவே அரசின் காணிகளை விடுவிக்கும் அதன் திட்ட வழிமுறை மீதும் சந்தேகங்கள் அதிருப்தியில் வெளிப்படுத்துவதாக இச் சந்திப்பு இருந்தது.

நாடு தழுவி வன பகுதிக்கான ஒதுக்கீடு 32 விதமாக இருக்கும் போது அதை விட கூடுதலாக கிளிநொச்சி மாவட்டத்துக்கான வன ஒதுக்கீடு ஏன் இருக்க வேண்டும் என மக்கள் பிரதிநிதிகள் வினா எழுப்பினார்.

போர்ச்சூழலில் போது குடியிருப்புக்கும் பயிர்செய்கைக்கு மாக மக்கள் பயன்படுத்திய காணிகளில் மக்கள் குடி அமர்வதற்கு வர்த்தமானி அறிவித்தலுக்கு அவசியமென்ன என்ற கேள்விகளும் கூட்டத்தில் எழுந்தன.

பாரிய இடப்பெயர்வுக்கு பின்னர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்ந்த தமது உற்பத்தி முயற்சிகளை தொடர்ந்த நிலையில் இவ்விடங்கள் வனபரிபாலன அதிகாரிகளால் எல்லை படுத்தப்பட்டுள்ளன.

1960 களில் வட்டக்கச்சியில் செயல்பாட்டில் இருந்த பாற்பண்ணை பிரதேசங்கள், பூநகரி யின் பல இடங்களில் மக்கள் வாழ்ந்த பகுதிகள் குடியிருப்புக்கு மறுக்கப்பட்டிருக்கிறது, மற்றும் மலையாள புரம் மக்கள் வாழ்ந்த பகுதிகள் வனபரிபாலன திணைக்களத்தின் எல்லைப்படுத்தப்பட்டிருப்பதும் இச் சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.


ஆனைவிழுந்தான் 600 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகள் 70 களில் இருந்து நீர் பாசனத்திற்கான உட்கட்டுமானங்கள் நிர்மாணிக்கப்பட்டு உற்பத்தி முயற்சிகள் போர்ச்சூழலில் நடைபெற்ற நிலையில் அந்த இடங்கள் இன்னும் ஏன் மக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்பட வில்லை என்ற கேள்விகளும் வனபரிபாலன அதிகாரிகளை நோக்கி முன்வைக்கப்பட்டன.

அவ்வாறே கிளி மாவட்டம் சிறந்த விவசாய செய்கைக்கான மாவட்டமாக வெளிப்பட்டிருக்கும் நிலையில் கால்நடை வளர்ப்புக்கான மேய்ச்சல் தரவை விடுவிப்பதில் வர்த்தமானி அறிவித்தலை காரணம் காட்ட முயற்சிப்பது மீதும் கேள்விகள் எழுந்தன.

வனவளத் திணைக்களத்தின் உள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடலின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் அவர்களிடம் ஊடகவியளார்களால் வினா எழுப்பப்பட்டது.




# யாழ்ப்பாணத்திலிருந்து அமெரிக்க விசாவுக்கு கொழும்பு சென்ற முதியவரைக் காணவில்லை!



யாழ்ப்பாணத்திலிருந்து விசா அலுவல்களுக்காக அமெரிக்க தூதரகத்திற்குச் சென்ற முதியவரை கொழும்பில் கடந்த 23 ஆம் திகதி முதல் காணவில்லை என உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

23.10.2023 அன்று கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகத்திற்கு சென்று அங்கு விசா அலுவல்களை நிறைவு செய்து விட்டு ஆட்டுப்பட்டித் தெருவில் உள்ள விடுதி



ஒன்றிற்கு உறவினர்களுடன் திரும்பிய முதியவர் அன்று பிற்பகல் 3 மணியளவில் கடைக்குச் செல்வதாக தெரிவித்து விடுதியிலிருந்து புறப்பட்டவர் இன்று வரை காணவில்லை என பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுதியிலிருந்து புறப்பட்டுச் செல்லும் போது பற்றர் கலர்சேட் மற்றும் வேட்டி அணிந்திருந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர் எனவே இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 0774354409 எனும் தொலைபேசி இலக்கத்திறகு அறிவிக்குமாறும் உறவினர்களால் கோரப்பட்டுள்ளது.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இந்திய ஆக்கிரமிப்பு படைகளினால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்ட 75 பணியாளர்களுக்கான 36 ஆம் ஆண்டு நினைவேந்தல்

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எற்பாட்டில், 1987 ஆம் ஆண்டு இந்திய ஆக்கிரமிப்பு படைகளின் போது படுகொலை செய்யப்பட்ட 75 பணியாளர்களுக்கான 36 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒருங்கிணைப்பாளர் தீபன் திலீசன் தலைமையில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் 1987 ஆம் ஆண்டு கடமைபுரிந்து வந்த நிலையில் படுகொலை செய்யப்பட்ட மகனின் தயார் ஒருவர் பிரதான சுடரினை ஏற்றி வைத்ததுடன் நினைவேந்தல் மலரஞ்சலினை செலுத்தினார்.

இவ் நிகழ்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிர்வாக உறுப்பினர்கள், பொதுமக்கள், படுகொலை செய்யப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



# பலஸ்தீனர்களின் சுதந்திரத்திற்கான ஆதரவை உறுதி செய்வோம்

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கண்டிக்கிறது

பலஸ்தீன தேசத்தின் மீது, அங்குள்ள பொதுமக்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் தொடர்ச்சியாக நடாத்திவரும் கனரக படைக் கருவிகளிலான தாக்குதல்களை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) வன்மையாகக் கண்டிப்பதோடு பலஸ்தீன தேசத்து மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு தொடர்ச்சியான எமது ஆதரவையும் உறுதிப்படுத்திக் கொள்கிறது.

பலஸ்தீன தேசத்தின் ஒரு பகுதியாயினும், பலஸ்தீன அதிகார சபையின் ஆளுகைக்குட்படா காசாப் பிரதேசத்தில் இருந்து கடந்த ஏழாம் திகதி ஹமாஸ் அமைப்பினர் மேற்கொண்ட தாக்குதலைக் காரணம் காட்டி, பலஸ்தீன மக்கள் அனைவரையும் காவு கொள்ளும் கொடூரமான தாக்குதல்களையும், வாழ்வாதாரத் தடைகளையும் செயற்படுத்த முனையும் இஸ்ரேலின் நோக்கம் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஹமாஸ் அமைப்பினால் பிடிக்கப்பட்ட பணயக் கைதிகள் விடுவிக்கப்படும் வரை உணவு மற்றும் மருந்து விநியோகங்களை தடை செய்து பலஸ்தீன மக்களை அடிபணிய வைக்க எத்தணித்த இஸ்ரேல் பல்வேறு புற அழுத்தங்களினால் தற்போது நட்பு நாடான எகிப்து ஊடாக மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் நடக்க அனுமதித்துள்ளது.

ஒரு இஸ்ரேலியர் காயப்படுத்தப்பட்டால் பதிலுக்கு பல பலஸ்தீனியர்களின் உயிர்களைக் காவுகொள்ளும் கொள்கையை நடைமுறைப்படுத்தி பலஸ்தீன மக்களுக்கு அச்சத்தையும் இஸ்ரேலிய மக்களுக்கு அதீத நம்பிக்கையையும் கொடுத்து வைத்திருந்த இஸ்ரேலின் புலனாய்வில் ஏற்பட்டுள்ள தோல்விக்கு ஒட்டுமொத்த பலஸ்தீன மக்களைப் பலிக்கடாவாக்கும் நோக்கத்தை அனுமதிக்க முடியாது.

மேற்குக் கரையில் ஆட்சியை வைத்திருக்கும் முகமட் அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபை 1960 களில் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்டிருந்த "இரு நாடு" எனும் தீர்வை ஏற்றுக் கொண்டிருந்தாலும், காஸாவின் ஆட்சியை வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை இஸ்ரேல் நடைமுறையில் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

காஸாவில் உள்ள ஹமாஸ் அமைப்பு உறுப்பினர்களை முற்றாக அழிப்பதென்பது காஸாவில் உள்ள அனைத்து பலஸ்தீன மக்களையும் படுகொலை செய்வதன் மூலமே சாத்தியமாகும். அத்துடன் ஹமாஸ் அமைப்பினரை அழித்தொழிக்க கங்கணம் கட்டி நிற்கும் இஸ்ரேல், ஏழாம் திகதித் தாக்குதலில் சம்பந்தப்பட்டிராத மேற்குக்கரையின் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் படைப்பலத்தை பிரயோகித்து தாக்குதல்களை நடாத்தி நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்களைக் கொன்று வருகிறது.

பலஸ்தீன தேசமானது, 2012.11.29 அன்று ஐ.நா. சபையின் 67/19 இலக்க தீர்மானத்தின் பிரகாரம் "பார்வையாளர் நாடு" எனும் வகையில் 127 உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2016.03.24 அன்று, ஐ நா பாதுகாப்புச் சபையில் பதின்நான்கு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், பலஸ்தீனப் பிராந்தியத்தில் இஸ்ரேலியக் குடியேற்றங்கள் நிறுவப்படுவது தடை செய்யப்படுகிறது. பதினைந்தாவது நாடான அமெரிக்கா வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இத்தனை ஏற்பாடுகளும் உலகின் உச்ச சபையில் இருந்தும்கூட, மொசப்பத்தேமிய நாகரீகத்தின் தொட்டில் என குறிப்பிடப்படும் மேற்படி பிராந்தியத்தின் உரித்தாளர்களில் ஒரு பகுதியினரான பலஸ்தீன மக்கள் மீது 1948 ஆம் அண்டில் நேச நாடுகளால் புதிதாக, பலவந்தமாக சிருஷ்டிக்கப்பட்ட இஸ்ரேலின் ஆக்கிரமிப்பும் அடாவடித்தனங்களும் நிறுத்தப்பட முடியாமல் இருக்கின்றன.

தன்னிடம் உதவி கேட்கும் நாடுகளுக்கு மனித உரிமை நிலவரங்களை நிபந்தனையாக்கும் மேற்குலகமும், உலக நாடுகளின் பொது அமைப்பான ஐ.நா வும் இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களை, பொதுமக்கள் மீதான படுகொலைகளை, யுத்தக் குற்றங்களை கண்டு கொள்ளாமலிருப்பதுடன் அதன் செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொண்டிருப்பதனை நாமும் எம் வரலாற்றுடன் ஒப்பிட்டு உணர்ந்து கொள்ள வேண்டும்.

2009 இல் வன்னியின் கிழக்கு கரையில் சிறு நிலப்பரப்பில் அடைபட்ட நிலையில் இருந்த மக்கள், புலிகளைக் காரணம் காட்டி ஆயிரக்கணக்கில் கொன்றொழிக்கப்பட அனுமதிக்கப்பட்டதைப் போலவே பலஸ்தீனத்திலும் ஹமாஸைக் காரணம் காட்டி அங்குள்ள மக்கள் கொல்லப்படுகின்றனர்.

மறைந்த பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத் அவர்களின் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கமும் அதன் அங்கத்துவப் போராளிகள் அமைப்புகளும் சுதந்திர பலஸ்தீனத்திற்காக போரிட்ட போது அவர்களுடன் இணைந்து பணியாற்றிய அனுபவங்களைக் கொண்டிருந்தவர்கள் நாங்கள். அன்று பலஸ்தீன மக்களின் போராட்டம் மதங்களைக் கடந்து தேசத்தின் விடுதலையையே இலக்காகக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் பெரும்பாலான பலஸ்தீனர்களும் கணிசமானளவு இஸ்ரேலியர்களும்கூட இரு நாடுகள் தீர்வுத் திட்டத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவே இருந்தனர்.

ஆனால் இன்று, மேற்குலக நாடுகளின் ஆதிக்க உணர்வும் பொருளாதார நலன்களும் அதற்கெதிரான பிராந்திய சக்திகளின் அதிகார முனைப்புகளும் பலஸ்தீன தேசத்தை சிதைத்து குறுக்கிவிட்டதோடு, அம் மக்களின் சுதந்திரப் போராட்டமும் அடிப்படைவாதப் போராட்டம் போல அணுகப்படுகிறது. முற்போக்கு சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கொண்டிருந்த பலஸ்தீன சக்திகள் பிராந்திய போட்டிச் சுழியில் சிக்கி கடும்போக்கு இஸ்லாமிய அமைப்புகளுடன் இணங்கி, இணைந்து செயற்படும் நிலைக்கு சென்று விட்டன.

சமாதான வலைக்குள் பலஸ்தீன அதிகார சபையை சிக்க வைத்து இஸ்ரேலிற்குப் பலத்தையும், பலஸ்தீனத்திற்கு வெறும் பார்வையாளர் தகுதியையும் வழங்கி, எழுச்சி கண்டு வந்த "இன்பாடிடா" போராட்டத்தை மழுங்கடித்த நோர்வே நாட்டு மத்தியஸ்துவம் குறித்து பலஸ்தீனத் தலைவர் அரபாத் அவர்கள் அன்று ஈழப் போராளிகளுக்கு விடுத்திருந்த எச்சரிக்கைக் குறிப்பை நாம் இன்று மட்டுமல்ல என்றும் நினைவிற் கொள்ளவேண்டும்.

பலஸ்தீன மக்களை விரட்டியும் பலஸ்தீனப் பிரதேசங்களை ஊடறுத்தும் உருவாக்கப்பட்ட இஸ்ரேலியக் குடியேற்றங்கள் விலக்கப்பட்டு குறைந்த பட்சம் 1967 இல் உலக நாடுகளால் இணக்கம் காணப்பட்ட எல்லைக்கோட்டுக்கு இஸ்ரேலியப் படைகள் மீள அழைக்கப்பட்டு உருவாக்கப்படக் கூடிய "இரு நாடுகள்" தீர்வே பலஸ்தீனத்தின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும். கூடவே இஸ்ரேலிய மக்களுக்கு பாதுகாப்பையும் நிம்மதியையும் கொடுக்கும்.

பலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலியர்களின் ஆக்கிரமிப்பு வடிவங்களையே இஸ்ரேலுடன் மிக நெருக்கமான உறவினைக் கொண்டிருந்த அன்றைய ஜே.ஆர் அரசு தமிழர் தாயகத்தில் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. குடியேற்றங்களை நிறுவுதல், தேசத்தை துண்டாக்குதல், பண்பாட்டினை மாற்றியமைத்தல், குடிப்பரம்பலை மாற்றியமைத்தல் என அனைத்தையும் படைபலத்தின் துணையுடன் நிறைவேற்றிக் கொண்டது. இன்று வரை அது தொடர்ந்து கொண்டே வருகிறது.

ஏறக்குறைய நூறாண்டுகளாக ஆக்கிரமிப்பாளனின், ஆயுதக் குழுக்களுக்கும் கட்டமைக்கப்பட்ட படைகளுக்கும் எதிராக விடாது போராடும் பலஸ்தீன மக்கள் தமது போராட்டத்தின் நியாயங்களை தார்ப்பரியங்களை அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு கடத்தவும் தவறவில்லை. பலஸ்தீன மக்களின் போராட்டத்துடன் ஒத்த பரிணாமங்களைக் கொண்டிருக்கும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு இவையெல்லாம் படிப்பினைகளே.

பலஸ்தீன மக்களினது, அவர்களது தேசத்தினது சுதந்திற்கான நியாயமான தீர்வுக்காக நாம் என்றும் அவர்களுடன் உறுதியாய் நிற்போம்.

ஊடகப் பிரிவு
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்)
21.10.2023

# ஐ.எம்.எப் இரண்டாம் கட்ட நிதியினை பெறுவதற்காக அரசாங்கம் நாட்டுமக்களுக்கு பெரும் சுமையைகொடுத்து வருகிறது — சிறிதரன் MP



தருமபுரம் 01 அரசினர் தமிழ்களைவன் பாடசாலையின் 65 வைரவிழாவில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஶ்ரீதரன் அவர்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

தற்பொழுது அரசாங்கம் ஐ.எம்.எப் இரண்டாம் கட்ட நிதியினை பெறுவதற்காக நாட்டுமக்களுக்கு பெரும் சுமையைகொடுத்து வருகிறது.

இதனால் ஐ.எம்.எப் இரண்டாம் கட்ட கொடுப்பனவை பெறுவதற்கு மின்சார கட்டணம் மற்றும் எரிபொருள், சமையல் எரிவாயு என்பனவற்றின் விலைகளை தாம் நினைத்தவாறு அதிகரித்து வருகிறது.

தற்பொழுது இந்த நாட்டில் அரச ஊழியர்களின் சம்பளமோ அல்லது தனியார் ஒருவரின் நாளாந்த சம்பவமோ அதிகரிக்கப்படவில்லை. வெறுமனே அரசாங்கம் தான் நினைத்தவாறு பொருட்களின் விலைகளை அதிகரித்து வருகிறது.

இதன் காரணமாக இந்த நாட்டில் மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கனடிய செய்திகள் Canadian News

## Grand Musical Show in Whitby, Canada
## Presented by Scarborough Latika Gold House on 21-10-2023 Was Very Successful

# ஸ்காபுறோ லத்திக்கா கோல்ட் ஹவுஸ் நகை மாளிகையினர் நடத்திய "இசை வெள்ளம்" மாபெரும் இசை நிகழ்ச்சி வெற்றி விழாவாகத் திகழ்ந்தது



கடந்த சனிக்கிழமை (21-10-2023) அன்று Whitby நகரில் உள்ள அழகிய மண்டபம் ஒன்றில் ஸ்காபுறோ லத்திக்கா கோல்ட் ஹவுஸ் நகை மாளிகையினர் நடத்திய "இசை வெள்ளம்" மாபெரும் இசை நிகழ்ச்சி வெற்றி விழாவாகத் திகழ்ந்து இசை ரசிகர்களின் பாராட்டுக்களையும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு தேடிக்கொடுத்தது.

மேற்படி .இசை நிகழ்ச்சியை நடத்த லத்திகா கோல்ட் ஹவுஸ் நிறுவனத்தாருக்கு "தமிழோசை" - ஸ்ரீகாந்தா அவர்களும் மிகுந்த பக்க பலமாக இருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.


மேற்படி இசை நிகழ்ச்சியில் பிரபல பாடகர் உன்னிமேனன். பாடகிகள் சைந்தவி. ரம்யா நம்பீசன் மற்றும் சுப்பர் சிங்கர் பாடக பாடகிகள் என பலரும் மேடையில் தோன்றி ரசிகர்களை மகிழ்வித்தனர். அத்துடன் கனடா வாழ் இளைய தலைமுறை பாடக பாடகிகளும் அங்கு தங்கள் திறமையை நிரூபிக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பெற்றன.

இசை வெள்ளம் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவென தமிழகத்தின் தொலைக்காட்சி அறிவிப்பாளர்கள் விஜே மற்றும் கிகி ஆகியோர் சிறப்பாக அழைக்கப்பட்டிருந்தனர். இசை வெள்ளம் நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வுகளை கனடா வாழ் அறிவிப்பாளர் ரஞ்சித் தொகுத்து வழங்கி தொடர்ந்து பிரதான அறிவிப்பாளர்களை மேடைக்கு அழைத்தார்.

மண்டபம் நிறைந்த விழாவாக நடைபெற்ற இந்த இசை வெள்ளம் நிகழ்ச்சிக்கு கனடா உ தயன் பத்திரிகையும் அச்சு ஊடக அனுசரனை வழங்கியிருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

விழாவின் இறுதியில் லத்திக்கா கோல்ட் ஹவுஸ் சார்பில் சசிகுமார்- பிரியா தம்பதி மேடையில் நன்றியைத் தெரிவித்தனர்.











- புகைப்படங்களுக்கு நன்றி -
- செய்தி.கொம் குணா மற்றும் ரவி அச்சுதன் -


# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

உலக செய்திகள் World News

# சுவிஸ் நாட்டுப் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கையரும் போட்டி




(22-10-2023)

22 ஆம் திகதி (22.10.2023) நடைபெற்ற சுவீஸ் பாராளுமன்ற தேர்தலில் இலங்கை மன்னார் மாவட்டம் பறப்பாங்கண்டல் கிராமத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்து வாழும் திரு. சந்தியாப்பிள்ளை கபிரியேல் இத் தேர்தலில் போட்டியிடுகின்றார்.

இவர் மன்னார் பறப்பாங்கண்டல் கிராமத்தில் 14.02.1957 இல் பிறந்தவர். இலங்கையின் வன்செயல் காரணமாக 1984 ஆம் ஆண்டு இலங்கையில் இருந்து ஜேர்மனிக்கு இடம்பெயர்ந்தார். பின் அங்கிருந்து 1986 ஒஸ்ரியா என்ற இடத்துக்குச் சென்றார். அந்த நாட்டில் நான்கரை வருடங்கள் பல்கலைக் கழகப் படிப்பை மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து சுவிஸ் நாட்டில் 1989 ஆம் ஆண்டு முதல் 25 வருடங்கள் மனநல வைத்தியசாலையில் ஆண் தாதியாக கடமை புரிந்தார். இதைத் தொடர்ந்து 8 வருடங்கள் எலும்பு முறிவு வைத்தியசாலையில் கடமை புரிந்து கொண்டிருந்த வேளையில் 1990 ஆம் ஆண்டு முதல் அவர் அந்த நாட்டின் அரசாங்க அங்கீகாரம் பெற்ற மொழி பெயர்ப்பாளராக இன்று வரை கடமை புரிந்து வருகிறார்.

மேலும் இவர் சுவிஸ் நாட்டில் மன்னார் மறைமாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் 7 கத்தோலிக்க ஆலயங்களில் 2019 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை திருப்பண்டப் பொறுப்பாளராகவும் திகழ்ந்து வருகிறார்.

இவற்றுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அவர் வாழும் பகுதியின் நகர சபை உறுப்பினராகவும் தொடர்ந்து இருந்து வருகிறார்.

இ ந் நி லை யி ல் திரு. சந்தியாப்பிள்ளை கபிரியேல் எதிர்வரும் 22ந் திகதி சுவிஸ் நாட்டில் நடைபெற இருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிடுகின்றார்.

இவர் இத்தேர்தலில் வெற்றி பெற்றால் சுவிஸ் பாராளுமன்றத்தில் இவர் முதல் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் என பதிவு செய்யப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# வாசிப்பு வாரத்தை முன்னிட்டு சர்வதேசபுகழ் பெற்ற பிரபல்யமான கவிஞர் சோலைக்கிளி அதீக் கௌரவிப்பு

(24-10-2023)

அம்பாறை மாவட்டம் கல்முனை கமு/கமு/ அஸ்-ஸுஹறா வித்தியாலயத்தில் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு விசேட காலை ஆராதனை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.








இந்நிகழ்வுக்கு சர்வதேசபுகழ் பெற்ற பிரபல்யமான கவிஞர் சோலைக்கிளி அதீக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி சொற்பொழிவாற்றினார்.

தொடர்ந்து மாணவர்களின் கையெழுத்துப் சஞ்சிகைகளையும் அவதானித்துடன் நூலகப்புத்தகங்களையும் பார்வையிட்டதோடு எதிர்காலத்தில் சிறுவர் நூலகம் ஒன்றை ஏற்படுத்துவதாகவும் கூறினார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் இ.பி.எஸ்.ஐ இணைப்பாளர் ஏ.நாசிக் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பழையமாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# பாடசாலை நிகழ்வுக்கு ஊர்காவற்றுறை பெண்கள் பாடசாலையின் அதிபரின் வங்கிக் கணக்கில் பல மில்லியன் – தகவல் அறியும் சட்ட மூலத்தில் உறுதி



தீவக கல்வி வலயத்தின் பிரபல்யமான ஊர்காவற்றுறை பெண்கள் பாடசாலையின் அதிபரின் தனிநபர் வங்கிக்கணக்கு மோசடியை மூடிமறைக்க முயல்வதாக பெற்றோர் தரப்பால் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரிவதாவது, யாழ்ப்பாணம் தீவகம் ஊர் புனித மரியாள் றோ.க மகளிர் வித்தியாலயத்தின் 2022ஆம் ஆண்டு 150வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு நண்பர்களிடமிருந்து பல மில்லியன் ரூபா நிதியினை அதிபர் தனிநபர் வங்கி கணக்கின் ஊடாக மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக ஆண்டுவிழா வாசிப்பின் போது கணக்கறிக்கை முறை கேடுகள் தொடர்பாக பெற்றோரால் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில் குறித்த பாடசாலை அதிபர் நிதி விடயம் தொடர்பில் உரிய பதில் வழங்கவில்லை.

இந்நிலையில் முறைகேடு தொடர்பில் வட மாகாண ஆளுநர் கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக கடிதம் அனுப்பப்பட்ட நிலையில் உரிய பதில் இதுவரை வழங்கப்படவில்லை.

இந்நிலையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தீவக வலயக் கல்வி அலுவலக தகவல் வழங்கும் அலுவலரிடம் பாடசாலையின் 150வது ஆண்டுவிழா கணக்கறிக்கைகள் தொடர்பான தகவல்களை முறைப்பாட்டாளர் கோரி விண்ணப்பித்தார்.

பதில் வழங்கிய தீவக கல்விவலய தகவல் வழங்கும் அலுவலர் தங்களால் கோரப்பட்ட ஆவணங்கள் தனிப்பட்ட நபர்களின் வங்கிக் கணக்கு பெயர்களினூடாக மேற்கொள்ளப்பட்டமையால் இவை தொடர்பான தகவல்களை வழங்கமுடியாதுள்ளது என உறுதிப்படுத்தியது.

பாடசாலை நிகழ்வுக்காக தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பணம் சேகரித்த அதிபருக்கு எதிராக வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றது என பெற்றோர் தரப்பால் சந்தேகம் வெளியிடப்படுகிறது.



# ஹர்த்தால் நாளில் நான்கு பேர் 2500 ரூபாவிற்காக பாராளுமன்றம் வந்தார்கள் – அங்கயன் எம்.பி சாடல்

வடக்கு கிழக்கு ஹர்த்தாலை அறிவித்த தமிழ் தலைவர்கள் நான்கு பேர் ஹர்தாலுக்கு செல்லாமல் 2 ஆயிரத்து 500 ரூபாவுக்காக பாராளுமன்றம் வந்தார்கள் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் அங்கயன் இராமநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் போராட்டங்களை வரவேற்கிறேன் ஆனால் தற்போதைய நாட்டின் பொருளாதார பிரச்சினையில் தமிழ் கட்சிகளின் மக்கள் பயப்பாடாத போராட்டங்கள் பயன் தராது.

போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த தமிழ் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அன்று தினம் 2500 ரூபா கொடுப்பனவுக்காக பாராளுமன்றம் வந்ததை அவதானித்தேன்.

நான் அவர்களில் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை யார் என அறிய வேண்டும் ஆனால் தகவல் அறியும் உரிமை சட்டம் மூலம் அவர்களின் பெயர்களை அறிந்து கொள்ள முடியும்.

இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் மக்களின் நாளாந்த வருமானத்தை இழக்க வைக்க கடையடைப்புப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்துவிட்டு தாங்கள் பாராளுமன்றத்தில் சலுகைகளை அனுபவிக்க வந்தார்கள்.

பாராளுமன்றம் செல்ல மக்கள் ஆணை பெற்றவர்கள் போராட்டம் என்ற போர்வையில் தொழில்களை நிறுத்தி மக்களை வீதிகளில் இறக்கிவிடு தாங்கள் சுக போகங்களை அனுபவிப்பவர்கள் உண்மையான மக்கள் பிரதிநிதிகளாக இருக்க முடியாது.

ஆகவே ஜனநாயக நாடு ஒன்றில் மக்கள் சுதந்திரமாக தமது கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களை நடாத்துவது வரவேக்கத்தக்க விடையமாகக் கருதப்படும் நிலையில் மக்கள் மயப்படாத போராட்டங்கள் பயன்தயாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பலஸ்தீனத்துக்கான தீர்வுப் பாதை இலங்கை விவகாரத்துக்கும் பொருந்தும்



வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

- **பௌ**த்தமயமாக்கல் புள்ளியில் மையம் கொண்டுள்ள தென்னிலங்கை
- "மதத்தை அல்ல நாட்டை நினையுங்கள்".
  - இந்திய உச்ச நீதிமன்றம்.

செவ்விந்தியர்களுடைய நாடு அமெரிக்கா. ஆனால் அங்கு செவ்விந்தியர்கள் இல்லை.

மாயர்களுடைய நாடு மெக்சிக்கோ. இன்று அங்கு மாயர்கள் இல்லை.

சுலு பழங்குடியினருடைய நாடு தென்னாபிரிக்கா. இன்று அங்கு சுலு பழங்குடியினர் இல்லை.

பார்சிகளின் நாடு ஈரான். இன்று பார்சிகள் அங்கு இல்லை.

இத்தகைய ஒரு நிலையை உருவாக்கி வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகத்தை முழுமையாக கபளீகரம் செய்து இலங்கை மண்ணை சிங்கள பௌத்தத்தின் தேசமாக பிரகடனப்படுத்துவதை இலக்காகக் கொண்டே இலங்கை அரசு மிக வேகமாகக் காய்களை நகர்த்தி வருகின்றது. இந்த நகர்வு இலங்கை அரசின் நிகழ்ச்சி நிரல் மாத்திரமல்ல தென்னிலங்கை அரசியல் தலைமைகளினதும் அவர்கள் சார்ந்த கட்சிகளினதும் தாரக மந்திரமாக உள்ளது. இந்த இலக்கை நோக்கிய பயணத்தில் தென்னிலங்கை சக்திகள் கட்சி அரசியல் பேதங்களுக்கப்பால் கைகோர்த்துப் பயணிக்கின்றன.

தென்னிலங்கையின் 90 வீதத்துக்கு மேற்பட்டவர்கள் எவ்வித கேள்விகளுக்கும் இடமின்றி பௌத்தமயமாக்கல் புள்ளியில் மையம் கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலத்தில் தமிழ் மக்களுடன் சில விட்டுக் கொடுப்புகளுக்கு கீழிறங்கி வந்த போதும் அது ஒரு தற்காலிக இராஜதந்திர நகர்வாகவே இருந்ததே அன்றி அதிகாரப் பகிர்வு விடயத்தில் சமரசரத்திற்கு இடமில்லை என்ற தமது கோட்பாட்டை மாற்றிக் கொள்வதற்கான சமிக்கையாகக் கூட அமையவில்லை என்பதை 2009 போர் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னரான 14 வருடகால பதிவுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

- இஸ்ரேல் தீர்வினைக்காணக் காண விரும்பவில்லை

பலஸ்தீன விவகாரம் குறித்து வழங்கிய நேர்காணலில் இஸ்ரேல் இராணுவ தலைவரும் அரசியல்வாதியுமான மோஸே தயான் (Moshe Dayan) பலஸ்தீனப் பிரச்சனைக்குத் தீர்வு காண விரும்பியிருந்தால் தீர்வினை எப்பொழுதோ கண்டிருக்கலாம். ஆனால் இஸ்ரேல் தீர்வினைக்காணக் காண விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

- இஸ்ரேல் வழியில் இலங்கை

இலங்கை அரசும் ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளனர். இலங்கை அரசும் ஆட்சியாளர்களும் தமிழர் விவகாரத்துக்குத் தீர்வினைக் காண வேண்டுமென்ற எண்ணப்பாடு இருந்திருக்குமேயானால் எப்பொழுதோ தீர்வினைக் கண்டிருக்கலாம். ஆனால் அத்தகைய ஒரு எண்ணப்பாடு இல்லை என்பதை சுதந்திர ,லங்கையின் வரலாறு தொடர்ச்சியாக உணர்த்தி நிற்கின்றது.

- இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

இந்தியாவில் மன்னர்களின் பெயர்களில் உள்ள வரலாற்று இடங்களின் பெயர்களை மாற்றக் கோரி பாரதீய ஜனதா கட்சியின் அஸ்வினி உபாத்தியா உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்த நீதிமன்ற நீதிபதிகள் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளனர்.

"ஒரு குறிப்பிட்ட சமூகத்தை குறிப்பிடுவதன் நீங்கள் சாதிக்க முயற்சிப்பது என்ன?

நாட்டைக் கொதிப்பான நிலையில் வைத்திருக்க வீரும்புகின்றீர்களா?

நாட்டை நினையுங்கள் மதத்தை அல்ல".

இவ்வாறு கூறக் கூடிய நிலையில் இலங்கையில் நீதிமன்றங்களும் இல்லை. நீதிபதிகளுக்கே நீதியும் பாதுகாப்பும் இல்லாத நிலையில் குறிப்பாக தமிழ் நீதிபதிகள் நாட்டை விட்டு வெளியேறும் நிலையில் இலங்கையில் நீதி உள்ளது.

- ஆயிரமாயிரம் தமிழர்கள் தண்டிக்கப்படலாம் ஆனால் எந்த ஒரு பௌத்த சிங்களவரும் தண்டிக்கப்படக் கூடாது.

அது மாத்திரமல்ல ஆயிரமாயிரம் தமிழர்கள் தண்டிக்கப்படலாம் ஆனால் எந்த ஒரு பௌத்த சிங்களவரும் தண்டிக்கப்படக் கூடாது என்பதில் இலங்கையின் அரசியல் கட்டமைப்பு உள்ளது. நீதிமன்றங்கள் தண்டித்தால் கூட அரசியல் கட்டமைப்பு தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இன்னொரு நீதியை வழங்கிவிடும். கொள்ளைகாரர்களுக்கு வெள்ளளை அடிக்கும் மரபு துடுகமுனு காலத்தில் இருந்து இன்றுவரை இலங்கையில தொடர்கின்றது.

இலங்கை அரசும் ஆட்சியாளர்களும் தமிழர் விவகாரத்தை அரச பயங்கரவாத கரங்களைக் கொண்டே தொடர்ச்சியாக அடக்கி வருகின்றனர்.தமிழ் மக்களை கொன்று குவித்து வருகின்றது.மறுபுறம் தமிழர் விவகாரத்துக்கத் தீர்வுகாணவும் தயார் இல்லை.

- ரணில் விக்ரமசிங்கவின் நான்கு தேச தீர்வு

ஆனால் பலஸ்தீன விவகாரத்துக்கு இலங்கையின் ஜனாதிபதி தீர்வினை முன்வைக்கின்றார். பலஸ்தீன விவகாரத்தில் இரு நாடுகள் என்ற கோட்பாட்டின் கீழ் சாவதேச அரங்கில் பேசப்பட்டு வருகின்றது. ஆனால் ரணில் விக்ரமசிங்க நான்கு தேசங்கள் என்ற அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டுமென தீர்வினை முன் வைக்கின்றார். அதாவது "இஸ்ரேல், பாலஸ்தீனம், காசா மற்றும் லெபனானை உள்ளடக்கிய நான்கு நாடுகளின் தீர்வுக்கான சாத்தியம் உட்பட மாற்றுத் தீர்வுகள் ஆராயப்பட வேண்டும்" என்று அவர் கூறுகின்றார். அவர் முன் வைத்துள்ள ."நான்கு-அரசு தீர்வு" என்ன என்பதை மேலும் விவரிக்கவில்லை.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் வன்முறை அதிகரித்ததால், இலங்கையின் வெளியுறவு அமைச்சகம் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்ததை அடுத்து, விக்கிரமசிங்க வெளியே வந்து ஹமாஸ் தாக்குதலைக் கண்டித்தார். எவ்வாறாயினும், "இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் என்ற இரு நாடுகளின் கருத்தாக்கத்திற்கு இலங்கையின் நீண்டகால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துவதாக" அவர் குறிப்பிட்டார்.

பலஸ்தீன விவகாரத்துக்கு நான்கு தேசங்கள் என்ற தீர்வினை முன்வைக்கும் இலங்கை ஜனாதிபதி இலங்கை விவகாரத்தில் இரு தேசங்கள் என்ற தீர்வுக்கு முன்வருவாரா? அல்லது மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எனற தீர்வுக்காவது முன் வருவாரா? என்ற தமிழ் மக்களின் கேள்விக்கு ரணில் விக்ரமசிங்க பதில் கூறவேண்டும்.

- "போர் ஒரு போதும் தீர்வாகாது"
  - மகிந்த

எங்கள் விவகாரத்தை நாங்களே பார்த்துக் கொள்வோம் எனக் கூறும் ரணில் விக்ரமசிங்க உற்பட இலங்கையின் அரசியல்வாதிகளில் தமிழ் மக்களின் குருதியில் குளித்த மகிந்த ராஜபக்ச சாத்தான் வேதம் ஓதுவது போல் "போர் ஒரு போதும் தீர்வாகாது" என இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனியருக்கும் அறிவுரை வழங்குகின்ராார்.

- ஐ.நா.பாதுகாப்பு பேரவையைக் கூட்டுக - சஜித்

எதிர்கால ஜனாதிபதி கனவில் மிதந்து கொண்டிருக்கும் சஜித் பிரேமதாசாபலஸ்தீன் விவகாரத்துக்கு நாடாளுமன்ற விவாதத்துக்கு அழைப்பு விடுத்துள்ளதுடன் ஐ.நா.பாதுகாப்பு பேரவையைக் கூட்டுமாறு கோரிக்கைவிடுத்துள்ளார். முள்ளிவாய்க்கால் அவலம் நடைபெற்ற போது இவர் எங்கிருந்தார் என்ற தமிழ் மக்களின் கேள்விகளுக்கு பதில் கூற வேண்டும்.

- ஐ.நா. தலையிட வேண்டும் - அநுரா குமார திசாநாயக்க

அடுத்த ஜனாதிபதி தேர்தலை எதிர் நோக்கி இருக்கும் ஜே.வி.பி அநுரா குமார திசாநாயக்க பலஸ்தீன பிரச்சனையில் ஐ.நா. தலையிட வேண்டுமென கோரிக்கைவிடுத்துள்ளார். தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொன்றொழிக்கப்பட்ட போது அநுரா ஏன் ஐ.நா. தலையீட்டைக் கோரவில்லை என்பதற்கான பதிலை தமிழ் மக்களுக்குத் தந்தாக வேண்டும்.

தமிழ் மக்களை அழித்து சிங்கள மக்களுக்கு தென்னிலங்கை சிங்களத் தலைமைகள் பரிசாக எதனை வழங்கினர் என்பது குறித்து சிங்கள மக்கள் சிந்தித்தாக வேண்டும். சிங்கள ஆளும் வர்க்கத்தின் 75 வருடகால ஆட்சி மூலம் சிங்கள மக்களுக்கு மாத்திரமல்ல ஒட்டு மொத்த இலங்கை மக்களுக்கும் தோற்றுப் போன நிமிர்த்த முடியாத ஒரு அரசையே வழங்கியுள்ளனர்.

இதில் இருந்து மீள்வதாயின் தனித்து சிங்கள மக்களால் முடியாது. தமிழ் மக்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பதிலேயே மீட்சி தங்கியுள்ளது.

சிங்கள தேசம் இதனை ஏற்குமா? பக்குவப்படுமா?

அதே வேளையில் பலஸ்தீனத்துக்கான தீர்வுக்கு வழி காட்டும் சிங்களத் தலைமைகள் தமிழர் விவகாரத்திற்கும் அதேபாணியில் தீர்வு காண முன் வாருங்கள்.

ஏனெனில் சிங்களத் தலைமைகளின் பலஸ்தீனத்துக்கான தீர்வுப் பாதை இலங்கை விவகாரத்துக்கும் பொருந்தும்.

Email : vathevaraj@gmail.com

---

## கல்விக்கு அரசியே
## (கீர்த்தனை)

**பல்லவி**

*வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் தேவியே!*
*உள்ளத் தாமரையில் உறைந்திட வருவாயே!*

**அநுபல்லவி**

*கள்ளமிலா அடியார் கவலை ஒழிப்பாயே!*
*அள்ளித் தருவாயே அருள்மழை தனையே!*

**சரணம்**

*கல்விக்கு அரசியே கலைமகட் தெய்வமே!*
*சொல்லுக்கு அகத்தியனைச் சொத்தாய்த் தந்தவளே!*
*மல்லுக்கு நிற்காமல் மன்றாடித் துதித்தேனே!*
*வல்லற்று உள்ளேனே வரமொன்று தருவாயே!*
*வெள்ளை – – – – – –*

**சரணம்**

*பண்ணோடு உனைப்பாடப் பரிதவித்து நின்றேனே!*
*கண்ணான ,சையைக் கானமாய் ,சைத்தேனே!*
*விண்ணோரும் வாழ்த்திடும் விமலித் தாயே!*
*மண்ணிலே மான்புற மங்கலம் அருள்வாயே!*
*வெள்ளை – – – – – –*

---

**ஆக்கம் ... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ்நாட்டு முகாம்களில் "நாடற்றவர்களாக" இருப்பவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப் பரிந்துரை




(26-10-2023)

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு சென்று, அங்கு அகதிகள் முகாம்களில் "நாடற்றவர்களாக" இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, தமிழக அரசின் உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை இந்திய மத்திய அரசு சாதகமாகப் பரிசீலித்தால், இந்திய குடியுரிமைக் கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு அரசு அமைத்த உயர்மட்ட குழுவின் பரிந்துரை, கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) அன்று கோயமுத்தூரில் "மலையகம் 200" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னணி தொழில் நகரமான கோயமுத்தூரில் அந்த மாநாட்டின் போது, அந்த உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான பேராசிரியர். இரா. இளம்பரிதி இதை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். "இலங்கை தமிழர்களின் நலன்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் உயர்மட்டக் குழு தனது இடைக்கால அறிக்கையில் தமிழக முகாம்களில் நாடற்றவர்களாக உள்ளவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளது".

அந்த இடைக்கால அறிக்கையானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முகாம்களிற்கும் விஜயம் செய்து, தங்கியுள்ளோரிடம் பேசி, தரவுகளைப் பெற்று அதை ஆய்வு செய்து ஒருங்கிணைத்த பின்னரே தயாரிக்கப்பட்டதாக சென்னை பல்கலைக்கழகத்தில் குற்றவியல் துறையில் பேராசிரியராக இருக்கும் இரா. இளம்பரிதி குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்திலுள்ள முகாம்கள் மற்றும் அதற்கு வெளியில் மிக நீண்டகாலமாக வாழ்ந்துவரும் இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்கு குறுகியகால மற்றும் நீண்டகால அடிப்படையில் சாத்தியப்படக்கூடிய தீர்வுகளை கண்டறிவதற்காக அரசால் இந்த குழு அமைக்கப்பட்டது.

முன்னதாக இந்த பன்னாட்டு மாநாட்டை ஆரம்பித்து வைத்து, உரையாற்றிய, தமிழ்நாட்டை ஆளும் திராவிட முன்னேற்ற கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தமிழ்நாட்டின் பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் குறித்து இந்திய மத்திய அரசு பாராமுகமாகவே உள்ளது என விமர்சித்தார்.

"தமிழ்நாட்டிலுள்ள முகாம்களில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் குறித்து டெல்லிக்கு மிகக் குறைந்தளவிற்கே புரிதல் உள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார். இந்திய நாடாளுமன்றத்தில் வட சென்னை தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் வைத்தியர் கலாநிதி வீராசாமி. தமிழக முதலமைச்சர் இந்த உயர்மட்ட குழுவின் அறிக்கையை ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், முகாம்களில் உள்ளவர்களை பொருளாதார ரீதியில் உயர்த்துவதில் அவர் முனைப்பாக இருப்பதாகவும் வலியுறுத்தினார்.

இந்தியாவில் உள்ளவர்களுக்கு குடியுரிமை வழங்குவது மத்திய அரசின் ஆளுமைக்கு உட்பட்ட விடயமாகும். அது தொடர்பிலான அனைத்து தீர்மானங்களை டில்லியே எடுக்க முடியும். மாநில அரசுகளிடமிருந்து வரும் ஆலோசனைகள் பரிந்துரைகளாக மாத்திரமே இருக்க முடியும். எனினும், அண்மையில் சென்னை உயர்நீதிமன்ற நீதியரசர் ஜி.ஆர். சுவாமிநாதன் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், அகதி முகாமிலிருந்து பெண் ஒருவருக்கு குடியுரிமை வழங்கப்பட்டு, பின்னர் அவர் இந்தியக் கடவுச்சீட்டும் பெற்றார் என்பது கவனிக்கத்தக்கது. அந்த தீர்ப்பும், அதையொட்டிய நடவடிக்கையும், மற்றவர்களுக்கும் அதே போன்று வழிவகுக்கும் என்று அந்த உயர்மட்டக் குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த மலையகம் 200 மாநாட்டில் பங்குபெற்ற இலங்கையின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ், மலையக தமிழர்களின் பிரச்சினையை மிகவும் எளிய முறையில் மாநாட்டு பங்கேற்பாளர்களுக்கு விளக்கினார். "இலங்கையில் நாங்கள் இந்தியத் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படுகிறோம், இந்தியாவில் நாங்கள் சிலோன் தமிழர்கள் என்றழைக்கப்படுகிறோம், ஆனால் வருத்தமளிக்கும் வகையில் தமிழக அகதி முகாம்களில் இந்திய வம்சாவளி தமிழர்கள் சுமார் 30,000 பேர் நாடற்ற நிலையில் உள்ளனர்".

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் துணைப் பொதுச்செயலாளருமான ஆ. ராசா, தனது குடும்பத்திற்கு மலையத்திற்கும் உள்ள தொடர்பை நினைவுபடுத்தி உரையாற்றினார். தனது மூத்த சகோதரர் இலங்கையின் மலையகத்தில் பிறந்தவர் எனவும், இந்த மாநாட்டில் எழுப்பப்படும் பிரச்சினைகளை மேலதிகமாக ஆராய்ந்து தமிழக முதல்வருடன் விவாதித்து ஆவனம் செய்வதாகத் தெரிவித்தார்.

இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக மலையக மக்கள் தொடர்பான மூன்று அமர்வுகள் இடம்பெற்றன. தாயகம் திரும்பியோர் அமர்வு, மலையகத் தமிழர் அமர்வு மற்றும் ஏதிலியர் அமர்வு என் அவை வகைப்படுத்தப்பட்டிருந்தன.

மலையகத் தமிழர்கள் தொடர்பான அமர்வில் இலங்கையில் வந்திருந்த பிரதிநிதிகள் பங்கேற்று இங்கிருக்கும் இருக்கும் பிரச்சினைகள், தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், சமூகப் பொருளாதார சவால்கள் ஆகியவை குறித்து அரங்கில் விளக்கமளித்தனர்.

ஏதிலியர்கள் தொடர்பான அமர்விற்கு பேராசிரியர் இரா. இளம்பரிதி தலைமையேற்று, தமிழ்நாட்டின் அகதிகள் முகாம்களில் உள்ளவர்கள் தொடர்பில் தாங்கள் நடத்திய ஆய்வு குறித்து விளக்கமளித்தார்.

இந்த அமர்வுகளில் 1964 ஆம் ஆண்டு "தீய எண்ணத்துடன்" உருவாக்கப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் தொடர்பில் பேசப்பட்டது. அந்த உடன்படிக்கை எப்படி இந்த மக்களைப் பிளவுபடுத்தி, பெருந்தொகையான எண்ணிக்கையினரை இந்தியாவிற்கு அனுப்பி, குடும்பங்கள் மற்றும் உறவுகளைப் பிரித்து மீள முடியாத துயரத்தை ஏற்படுத்தியது என அவையோருக்கு விளங்கப்படுத்தப்பட்டது.

மலையக, தாயகம் திரும்பிய தமிழருக்கான இயக்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில் 11 தீர்மானங்கள் வாசித்து நிறைவேற்றப்பட்டன. அதில் முதன்மையாக பொறுப்புக்கூறல் இடம்பெற்றிருந்தது.

"200 வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கு கூலித் தொழிலாளர்களாகக் கொண்டு செல்லப்பட்ட மக்கள், இன்று இலங்கையில் மலையகத் தமிழர்களாகவும், இந்தியாவில் தாயகம் திரும்பியோராகவும், தமிழ்நாட்டில் ஏதிலிகளாகவும் சிதறிக்கிடக்கின்றனர். இப்படி சிதறடிக்கப்பட்டமைக்கு இலங்கை அரசும், இந்திய மத்திய அரசும் பிரித்தானிய அரசும் பொறுப்புக்கூற வேண்டும்" என்பது முதல் தீர்மானம்.

மலையகத் தமிழர்கள் தனியொரு சமூகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என மற்றுமொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "மலையகத் தமிழர்கள் ஒரு தனித்த மக்கள் சமூகம் என இலங்கை அரசு சட்டவகையில் அங்கீகரிக்க வேண்டும். கடந்த 200 ஆண்டுகளில் ஆங்கிலேய அரசால் பல்வேறு வேலைகளில் ஈடுபடுவதற்காக இலங்கைக்கு அழைத்து செல்லப்பட்ட தமிழர்கள் அனைவரும் மலையகத் தமிழர்களாக வரையறுக்க வேண்டும்".

இலங்கையில் ஆட்சிமுறை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என மற்றொரு தீர்மானம் வலியுறுத்தியது.

"இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பை மாற்றி, ஒரு கூட்டாட்சி ஏற்பாட்டின் மூலம் தம்மைத் தாமே நிர்வகித்துக் கொள்ளும் வகையில் மலையகத் தமிழர்களுக்கு அரசியல் அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்".

மலையகத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென மற்றொரு தீர்மானத்தின் மூலம் கோரப்பட்டது. "பெருந்தோட்ட பொருளாதார மேம்பாட்டை மையமாக கொண்டு மலையகத்தில் மலையகப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும்".

"மலையக மக்களுக்கு காணி உரிமையும், வீட்டு உரிமையும் வழங்குவதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும்".

அந்த மாநாட்டின் முதல் தீர்மானத்தில் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு இந்திய, இலங்கை, பிரித்தானிய அரசுகள் பொறுப்புக்கூற வேண்டும் என வலியுறுத்தப்பட்ட நிலையில், கடைசி தீர்மானத்தில் அதே அரசுகள் பொருளாதார உதவிகளைச் செய்ய வேண்டும் எனவும் கோரப்பட்டது. "இலங்கையில் உள்ள ஏனைய இனச் சமூகங்களைவிட அனைத்து வகையிலும்



பின் தங்கியுள்ள மலையக மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த பொருளாதார உதவிகள் வழங்குவதற்கு இலங்கை, இந்திய, பிரித்தானிய அரசுகள் முன்வர வேண்டும்".

இந்த ஆண்டு ஜூன் மாதம் திருச்சி மாநகரில் இதே போன்றதொரு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டிலும், மலையக மக்கள் பிளவுபட்டு இந்தியா இலங்கையில் வாழ்வது, அவர்கள் அனுபவிக்கும் துயரங்கள், சமூகப் பொருளாதார பின்னடைவுகள், பல தசாப்தங்களாக வேலை வாய்ப்புகள் மற்றும் சொத்துக்களை இழந்து துன்புறுவது ஆகியவற்றிற்காக, இந்தியா, இலங்கை மற்றும் பிரித்தானிய அரசுகளை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும். அவர்களால் 200 ஆண்டுகளாக இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு இந்த மூன்று நாடுகளும் அந்த நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


**இணுவில் திருவூர் ஒன்றியம் - கனடா** *அறிவித்தல்*

**பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகசபைத்தெரிவும்**
**நிர்வாக ஆண்டு (2023--2025)**

காலம்: 28-10-2023 (சனிக்கிழமை)
இடம்: ரொறன்ரோ நகரசபை மண்டபம்
Scarborough Civic Centre (Room 1&2)
150 Borough Dr, Scarborough
காலம்: 4:00 மாலை - 6:00 மாலை

**ஊர் அபிமானிகள் மற்றும் ஒன்றிய அங்கத்தவர்கள் அனைவரையும் இப்பொதுக்கூட்டத்திற்கு வருகை தந்து நல்லாலோசனைகளிற் கலந்து சிறப்பிக்குமாறு அன்போடு அழைக்கிறோம்.**

தொடர்புகளுக்கு: சாந்தி சர்வானந்தா: (647) 200-2177
மு. கிருபாகரன்: (416) 430-0422
ப. கஜஜெயன்: (416) 732-5898

இலங்கை செய்திகள் Sri Lanka News

# பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 3 மாணவர்கள்




(22-10-2023)

தலைமன்னார் ராமேஸ்வரம் இடையில் உள்ள பாக்கு நீரிணையை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியை சேர்ந்த 3 மாணவர்கள் நீந்தி கடந்து சாதனை படைத்துள்ளார்கள்.

இந்த நிகழ்வுக்கான அனுசரணையை மன்னார் ரோட்டரி கழகம் வழங்கியுள்ளது.

குறித்த சாதனை நிகழ்வுகள் 21-10-2023 மாலை 4 மணி அளவில் நீச்சல் குழுவினர் தனுஷ்கோடி கரைக்குச் சென்று 22-10-2023 அன்று காலை 3 மணியளவில் கடலில் குதித்து நீச்சல் நிகழ்வை ஆரம்பித்து மதியம் 1 மணியளவில் தலைமன்னார் கரையை வந்தடைந்தனர்.

குறித்த சாதனை மாணவர்களை மன்னார் ரோட்டரி கழக உறுப்பினர்கள் உட்பட பல கல்வியாளர்கள் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

இந்த சாதனை நிகழ்வில் மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி சாரணர்களின் 150 வருட நிறைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்டது.





இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களும், 15 வயதுக்குட்பட்ட ஒரு மாணவரும் பாக்கு நீரிணையை கடந்து சாதனை படைத்தார்கள்.

இவர்களுக்கான சான்றிதழ்களை சோழன் ஆசிய சாதனை அமைப்பு வழங்கியிருந்தது.

மேலும் பல அனுசரணையாளர்கள் உடன் மன்னார் மாவட்டத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கான இணை அனுசரணை மன்னார் ரோட்டரி கழகம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு பல்வேறு துறைசார் நிபுணர்களின் வினைத்திறனாக இயங்கிறது – சுகாதார சேவைகள் பணிப்பாளர்



- மன்னார் நிருபர் (23-10-2023)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு பல்வேறு துறைசார் சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர்களின் நியமனங்களை அடுத்து மிகவும் வினைத்திறனாக இயங்கி வருவதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி. வினோதன் தெரிவித்தார்.

இதனால் ஏற்பட்டுள்ள கேள்வியை ஐ ஈடு செய்யும் வகையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பிரிவுக்கு புதிய சத்திரசிகிச்சை மேசை உலகவங்கியின் முதனிலை சுகாதார சேவை நிறுவனங்களை அபிவிருத்தி செய்யும் செயற்றிடத்தினூ டாக கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமமான பணிகள் முன்னெடுப்பு

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள விசுவமடு தேராவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் 22.10.2023 அன்று சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இவ் சிரமமான பணியில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் அவர்களும் கலந்து சிரமதான பணியில் ஈடுபட்டார். இதன் போதும் மாவீரர் நாள் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் கருத்துக்கள் தெரிவித்தார்.



# புங்குடுதீவு கடற்றொழிலாளர்களுக்கு இரண்டாம் கட்ட இலவச மண்ணெண்ணை வழங்கிவைப்பு!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியின் காரணமான சீன அரசாங்கத்தினால் நன்கொடை மூலம் கிடைக்கப்பெற்ற மண்ணெண்ணெய் வேலணை புங்குடுதீவு கடற்றொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு திங்கட்கிழமை (23.10.2023) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் துறைசார் அதிகாரிகளால் வழங்கிவைக்கப்பட்டது.

புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நடைபெற்ற குறித்த இந்நிகழ்வில் யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள பரிசோதகர் ஜெயசிலன், கடற்றொழில் உத்தியோகத்தர் அகிலன், பங்குடுதீவு கடற்றொழில் பரிசோதகர் கருணாநிதி, மற்றும் கடற்றொழில் அமைச்சின் பிரதிநிதிகளான கட்சியின் ஊடகப் பேச்சாளரும் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சி தலைவருமான கந்தசாமி கமலேந்திரன், எனப் பலரும் கலந்து கொண்டு கடற்றொழிலாளர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கி வைத்திருந்தனர்.



கடற்றொழிலாளர்களுக்கு முதற்கட்டமாக 75 லீற்றர் வீதம் வழங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இன்று இரண்டாம் கட்டமாக 78 லீற்றர் என்ற அடிப்படையில் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளதுமை குறிப்பிடத்தக்கது.

# முறிகண்டிப் பிள்ளையார் வழக்கு தள்ளுபடி – அபிவிருத்திகளை துரிதப்படுத்த அரச அதிபர் நடவடிக்கை



12 வருடமாக இடம்பெற்ற திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலய உரிமை தொடர்பான வழக்கு செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் ஆலயம் 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்றதும் பராமரிப்புக்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தற்போது இந்த ஆலயம் இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றது.

கோவில் வருமானத்தில் ஒரு பகுதி வன்னிப்பிராந்தியத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக இந்துப் பண்பாட்டு நிதியத்தின் மூலம் செலவிடப்படுகிறது.

திருமுறிகண்டிப் பிள்ளையார் கோவிலின் பரம்பரை அறங்காவலர் என்று கூறிக்கொள்ளும் ஒருவரால், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகித்து வரும் இவ் ஆலயத்தினை தன்னிடம் மீள ஒப்படைக்குமாறு நீதிமன்றத்திற்கு உத்தரவிடக் கோரி 2011 ஆம் ஆண்டு அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்தார்.

நீண்ட காலமாக இடம்பெற்ற இவ்வழக்கு இன்றயதினம் மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. குறித்த ஆலயம் அமைந்துள்ள ஆலய காணி அரச காணி என்பதால் தனி நபர் ஒருவர் ஆலயத்திற்கு உரிமை கொண்டாட முடியாது.

நீண்ட காலமாக இவ் வழக்கு இடம்பெற்று வந்ததால் குறித்த பிரதேசத்தில் அடிப்படை சுகாதார வசதிகள், உட்கட்டுமானப் பணிகள் மற்றும் பிரதேசத்தை அழகுபடுத்தும் பணிகள் மேற்கொள்வதற்கு தடை ஏற்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க உமாமகேஸ்வரன், ஆலய உரிமை தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதால் இப்பகுதியை துரிதமாக அபிவிருத்தி செய்யும் பல்வேறு திட்டங்களை செற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

# வன்னி ஹோப் நிறுவனத்தினால் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் முன் னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திப்பணிகள் கையளிப்பு






- மன்னார் நிருபர் (25-10-2023)

வன்னி ஹோப் நிறுவனத்தினால் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் முன் னெடுக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திப்பணிகள் முடிவடைந்த நிலையில் புதன்கிழமை (25) காலை வைபவ ரீதியாக பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டது.


வன்னி ஹோப் நிறுவனத்தினால் மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட பெண்கள் மலசல கூட தொகுதி, ஆரம்ப பிரிவுக்கான மலசல கூட தொகுதி, விடுதி மாணவர்களுக்கான குளியல் அறை தொகுதி, மற்றும் குழாய்க் கிணறு ஆகியவை அமைத்துக் கொடுக்கப்பட்டது.

குறித்த வேலைத் திட்டங்களுக்கான நிதி உதவியை அமரர் கே.சிற்றம்பலத்தின் குடும்பத்தினர், வைத்தியர் வானி பிரேமஜித் மற்றும் வின்திரன், ராஜினி குடும்பத்தினர் வழங்கி இருந்தனர்.

குறித்த நிகழ்வில் மன்னார் நகர பிரதேசச் செயலாளர் எம். பிரதீப், வன்னி ஹோப் நிறுவன பிரதி நிதிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# முத்தவெளியில் நடந்த இசை நிகழ்ச்சி

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



யாழ்ப்பாணம் பொது வைத்தியசாலையில், இந்திய அமைதி காக்கும் படையினர் செய்த படுகொலைச் சம்பவம் கடந்த இருபதாம் திகதி நினைவு கூரப்பட்டது. அதே நாளில் யாழ்ப்பாணம் முத்த வெளியில் சந்தோஷ் நாராயணனின் இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. ஆஸ்பத்திரிப் படுகொலைகளை நினைவு கூரும் நாளில் இசை நிகழ்ச்சியைச் செய்யாமல் வேறு ஒரு நாளைத் தெரிவு செய்யுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சந்தோஷ் நாராயணனிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.யாழ் நகரப் பகுதியில் உள்ள சுவர்களில் ஆஸ்பத்திரி படுகொலைகளை நினைவு கூர்ந்து சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அன்றைய தினம் ஆஸ்பத்திரியில் அதன் பணிப்பாளர் தலைமையில் மேற்படி படுகொலை நினைவு கூரப்பட்டது.

அன்று பின்னேரம் யாழ் முத்த வெளியில் ஆயிரக்கணக்கானவர்கள் நிரம்பி வழிந்தார்கள். அன்று மழை நாள். எனினும் பின்னேரம் மழை விட்டுத் தந்தது. அதனால் இசை நிகழ்ச்சி பிரமாண்டமாகக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சந்தோஷ் நாராயணன் போரில் உயிர் நீத்த தமிழ் மக்களை நினைவு கூர்ந்தார். பாடகர்கள், ஈழப் போரைப் பிரதிபலிக்கும் பாடல்கள் சிலவற்றைப் பாடினார்கள்.

2009க்கு பின் முத்தவெளியில் அவ்வளவு தொகையான மக்கள் கூடியது அதுதான் முதல் தடவை. பல்லாயிரம் கணக்கானவர்கள் அங்கே கூடியிருந்தார்கள். குடா நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ரசிகர்கள் அங்கு கூடியிருந்தார்கள். சிங்கள ரசிகர்களும் அங்கே காணப்பட்டார்கள். வயது வேறுபாடு இன்றி, பால் வேறுபாடு இன்றி, எல்லாத் தரப்பினரையும் அங்கே காண முடிந்தது. முத்தவெளியில் தொடங்கி முனியப்பர் கோவில் வரையிலும் வாகனங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அதற்கு அப்பாலும் சாலை ஓரங்களில் வாகனங்கள் வரிசையாக நின்றன. முத்தவெளி மனிதத் தலைகளால் நிரம்பி வழிந்தது. யாழ்ப்பாணத்தில் இளையோர் தாகத்தோடு இசை நிகழ்ச்சியை ரசித்தார்கள், கொண்டாடினார்கள். சந்தோஷ் நாராயணன் குழுவினர் பாடப் பாட தாளத்துக்கு ஏற்ப ஆடினார்கள்.

அதாவது மக்கள் கொண்டாட வேண்டும் என்ற மனோ நிலையோடு காணப்படுகிறார்கள். அவர்களுக்குக் கொண்டாட்டங்கள், பெருவிழாக்கள் தேவைப்படுகின்றன. அது இயல்பானது. இசை விழாக்களில் மட்டுமல்ல முத்தவெளியில் ஒழுங்கமைக்கப்படும் வர்த்தகக் கண்காட்சிகளிலும் மக்கள் பெருந்திரளாகக் கூடுவார்கள். ஒரு கோவில் திருவிழாவையும் விடாமல் பெருந்திரளாகக் கூடுவார்கள். மக்கள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்க விரும்புகிறார்கள். கொண்டாடக் கிடைக்கும் எந்த ஒரு தருணத்தையும் அவர்கள் இழக்க விரும்பவில்லை.

அதுதான் சரி வாழ்க்கையைக் கொண்டாட வேண்டும். விடுதலை என்பதே பெரிய கொண்டாட்டம்தான். கட்டற்ற கொண்டாட்டம். விட்டு விடுதலையாகி நிற்பது.

எனவே மக்கள் சந்தோஷமாக இருப்பதிலோ, கொண்டாட்டங்களில் தாகமாக இருப்பதையோ தவறு என்று கூற முடியாது. கொண்டாட்டங்கள் இல்லை என்றால் மக்கள் போராட்டத்தின் பக்கம் வருவார்கள் என்பது தவறான கருத்து. ஒரு போராட்ட அமைப்பு அல்லது கட்சி மக்களுக்கு பொருத்தமான நம்பிக்கைகளை ஊட்டி அவர்களை இலட்சியத்தை நோக்கி ஈர்க்கும் போது மக்கள் போராடுவதை ஒரு கொண்டாட்டமாக ஏற்றுக்கொள்வார்கள்.

போராளிகள் அல்லது தலைவர்கள் அல்லது செயற்பாட்டுத் தலைவர்கள் சன்னியாசிகளாக இருக்கலாம். முன்னுதாரணமாக இருக்க வேண்டும். அதனால்தான் அவர்களை சமூகம் மதிக்கின்றது. அண்ணாந்து பார்க்கின்றது. அவர்கள் சொல்வதைக் கேட்கின்றது. அதற்காக முழுச் சமூகமும் சன்னியாசிகளாக உலக சுகங்களைத் துறந்து போராட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

எனவே 2009 க்கு பின்னரான தமிழ் மக்களின் அரசியலைக் குறித்த ஒரு சரியான தரிசனம் தமிழ் அரசியல்வாதிகளிடமும் செயற்பாட்டாளர்களிடமும் கருத்துருவாக்கிகளிடமும் இருக்க வேண்டும். தமிழ் மக்களின் கூட்டு மனோநிலையை விளங்கிக் கொள்ளாமல் அவர்களை வழிநடத்த முடியாது.

முத்த வெளியில் சந்தோஷ் நாராயணன் ஈழப்போரை எதிரொலிக்கும் பாடல்களைப் பாடிய பொழுது மக்கள் ஆரவாரத்தார்கள்? அதற்குள் இருக்கிறது விடயம். எல்லாருடைய அடிமனதிலும் அது இருக்கிறது. விடுதலைக்கான பெரு விருப்பு. அதற்கு யார் தலைமை தாங்குவது? அதை எப்படி ஒரு ஆக்கபூர்வமான அரசியல் சக்தியாக மாற்றுவது?

ஓர் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு தியாகியின் நாளாகத்தான் இருக்கும். அல்லது ஏதோ ஒரு நினைவு கூர்வதற்கான நாளாகத்தான் இருக்கும். ஈழத் தமிழர்களின் அரசியல் நாட்காட்டி எனப்படுவது அப்படித்தான் இருக்கும். எனவே நினைவு கூர்தல் இல்லாத ஒரு நாளாகப் பார்த்து கொண்டாட்டங்களை செய்வது என்பது யதார்த்தமானது அல்ல. அதே சமயம் பிரதான நினைவு கூர்தலின் கூட்டு உளவியலைக் குழப்பாதபடி கொண்டாட்டங்களை ஒழுங்குபடுத்தலாம். அதை யார் செய்வது? இதை இன்னும் ஆழமான பொருள் கேட்டால் தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?

இதுதான் பிரச்சனை. தமிழ் மக்களின் இன்ப துன்பங்களுக்கு யார் பொறுப்புக் கூறலாம் என்றால் தமிழ் மக்களை முழுமையாக பொறுப்பெடுக்கக்கூடிய அரசியல், சமூக, மதத் தலைவர்கள்தான். அப்படிப்பட்ட தலைவர்கள் இப்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் உண்டா? அல்லது அவ்வாறு தலைவர்களாக வர வேண்டும் என்ற ஆசையாவது தமிழ் கட்சித் தலைவர்கள் மத்தியில் உண்டா?

அவ்வாறு தமிழ் மக்களுக்கு பொறுப்பு கூறத்தக்க தலைவர்கள்தான் தமிழ் மக்களின் இன்ப துன்பங்களைத் தீர்மானிக்கும் விடையங்களில் தமிழ் மக்கள் மத்தியில் கருத்தை உருவாக்கலாம். அவ்வாறு தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கத்தக்க தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இல்லை. ஒரு மக்கள் கூட்டத்தின் கூட்டு உளவியலை, கூட்டு அபிப்பிராயத்தை, கூட்டுக் கருத்தைத் திரட்ட முடியாத கட்சிகளோ, செயற்பாட்டு அமைப்புகளோ குடிமக்கள் சமூகங்களோ சொல்வதை அந்த மக்கள் கேட்கப் போவதில்லை. எனவே இந்த விடயத்தில் தமிழ் மக்களின் கூட்டு உளவியலை ஆகர்சிக்கக்கூடிய, அந்தக் கூட்டு உளவியலில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய தலைவர்கள் உருவாக வேண்டும். இல்லையென்றால் நீதிக்காகப் போராடும் தமிழ் மக்களின் கூட்டுச் சக்தியானது விரயமாகிவிடும். அல்லது திசை திருப்பப் பட்டு விடும்.

ஓர் ஆயுதப் போராட்டம் நடக்கும் பொழுது, அங்கே கொண்டாட்டங்களுக்கு வரையறைகள் இருக்கும். அந்தச் சமூகம் அல்லது நாடு யுத்த எல்லைகளால், அல்லது காவலரண்களால் சுற்றிவளைக்கப்பட்டிருக்கும். அதாவது மூடப்பட்டிருக்கும். ஆனால் ஆயுதப் போராட்டம் இல்லாத ஒரு சூழலில் அப்படியல்ல. யுத்தம் இல்லாத ஒரு சூழலில் அந்தச் சமூகம் வெளிச்சக்திகளுக்குத் திறக்கப்பட்டு விடும். அல்லது போரில் வெற்றி பெற்ற தரப்பு எந்த வழியைத் எதற்காக திறப்பது என்று திட்டமிட்டு வழிகளைத் திறந்து விடும்.

போரில் தோற்கடிக்கப்பட்ட பின் வெளிச்சக்திகளுக்குத் திறந்து விடப்பட்ட ஒரு சமூகத்தை நோக்கி எல்லாத் தீங்கான விடையங்களும் உட்பாய்ச்சப்படும். நுண்கடன் நிதி நிறுவனங்கள் போதைப்பொருள் விநியோகஸ்தர்கள் நுகர்வுத் தாகத்தைத் தூண்டும் வணிகர்கள் இடைத்தரகர்கள் எல்லாருமே உள்ளே வருவார்கள். வேலியில்லாத வயலை கட்டாக்காலிகள் மேய்ப்பதுபோல மேய்ந்து விட்டுப் போவார்கள். ஒரு காலம் இலட்சிய முன்மாதிரிகளால் துண்டப்பட்டு, தியாகத்துக்கும் அர்ப்பணிப்புக்கும் தயாராக இருந்த இளையோரை எப்படி அரசியல் நீக்கம் செய்யலாம் போதைக்குள் மூழ்கடிக்கலாம் வாள்களைக் கொடுத்து மோத விடலாம் கட்சிகளாகப் பிரிக்கலாம்......என்றெல்லாம் திட்டமிட்டு அவர்கள் வேலை செய்வார்கள்.

2009க்குப் பின் வெளி உலகத்துக்கும் சூதான உட் சக்திகளுக்கும் திறந்து விடப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தை கட்டுக்கோப்பானதாக இலட்சிய பாங்கானதாக மாற்றுவதற்கு அரசியல்வாதிகளால் மட்டும் முடியாது. அதற்கு அரசியல் செயற்பாட்டாளர்கள், குடிமக்கள் சமூகங்கள், படைப்பாளிகள், மத நிறுவனங்கள், மருத்துவர்கள், உளநல மருத்துவர்கள் போன்றோர் கூட்டாகச் செயல்பட வேண்டும். அது ஒரு கூட்டுச்சிகிச்சையாக கூட்டுக் குணமாக்கல் அரசியலாக அமைய வேண்டும். ஆனால் அவ்வாறான கூட்டுச் செயற்பாடுகளை தமிழ் மக்கள் மத்தியில் யாரிடமும் பார்க்க முடியவில்லை.

இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய ஒரு சமூகத்தில் இருந்து கனடாவை நோக்கியும் பிரித்தானியாவை நோக்கியும் ஒரு புலப்பெயர்ச்சி அலை தோன்றியிருக்கிறது என்றால் அதற்கு யார் பொறுப்பு?

ராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்ட தமிழ் மக்களை அரசியல் ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் தோற்கடிப்பதற்கு சிங்கள பௌத்த அரசியல் நிகழ்ச்சி நிரல் தொடர்ந்து துடிப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ்க் கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?

பலமான பண்பாட்டு அடித்தளத்தைக் கொண்டிருக்கும் ஒரு மக்களை இலகுவாகத் தோற்கடிக்க முடியாது. “கலாச்சாரமே தேசிய விடுதலையின் திறப்பு” என்று அமில்கார் கப்ரால் கூறுவார். சுதந்திரத்துக்காக போராடி வென்ற எல்லா மக்களுக்கும் இது பொருந்தும். தமிழ் மக்களுக்கு இப்பொழுது தேவையாக இருப்பது அரசியல் மறுமலர்ச்சி மட்டுமல்ல, பண்பாட்டு மறுமலர்ச்சியுந்தான். எந்தக் கட்சியிடமாவது கலை கலாச்சார அமைப்பு உண்டா என்று ஒரு ஊடக நண்பர் கேட்டார்.

தோற்கடிக்கப்பட முடியாத பலமான பண்பாட்டு அடித்தளத்தை கொண்ட தமிழ் மக்களை கடந்த 15 ஆண்டுகளாக ஆண்டுகளாக ஒரு திரளாக கூட்டிக்கட்ட தவறிய தவறிய எல்லா தமிழ் கட்சிகளும், குடிமக்கள் சமூகங்களும், மதத்தலைவர்களும் படைப்பாளிகளும், கருத்துருவாக்கிகளும் இதற்குக் கூட்டுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

## வீணாவின் கவிக்கணை

ஏட்டுப்படிப்பு
அறிவை வளர்த்து
மெத்த மேதாவியாக்க,
அனுபவ படிப்போ
மீண்டும் மீண்டும்
அடிவாங்காமல்
தவிர்த்து
நம் சுற்றம் உணர்ந்து
மனம் தெளிந்து
இந்த உலகை படிக்க!


Home Renovations
Coverall Group Inc.
* Residential
* Commercial
* Building Permits
* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
Contact: Siva
416-706-8160


தமிழ் மிரர்
Tamil Mirror
Awards Gala 2023.
NOVEMBER
5
SUNDAY
4.00 PM
18
YEARS
ANNIVERSARY
CELEBRATION
DSN
The Golden Voice
T. Ramalingam
Motivational Speaker
Tamil Nadu
Deshan Styler
South African Music Sensation
Chinese Cultural Centre 5183 Sheppard Ave East Call: 416-697-0126

# 9வது ஆண்டு நினைவஞ்சலி



**மண்ணில் பிறப்பு:**
**29 - 11 - 1977**

**விண்ணிற்கு பறப்பு:**
**9 - 11 - 2014**

# திருமதி. கேமலதா விக்னராஜ்

யாழ்ப்பாணம் புதுச் செம்மணி வீதி கல்வியங்காட்டை சேர்ந்த
நடராஜா சந்திரா - சந்திரா சிவலோஜினி தம்பதியரின் புதல்வியும்,
கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், கனடா அஜெக்ஸ் நகரை வதிவிடமாகவும் கொண்டிருந்த
திருமதி. கேமலதா விக்னராஜ் அவர்களின் 9வது ஆண்டு நினைவஞ்சலி.

*அன்பின் திருவுருவாய் ஆண்டுகள் முப்பத்தி ஏழு*
*எம்மோடு வாழ்ந்தாய் இதயங்களைக் கவர்ந்தாய் கேமா!*
*துன்பங்கள் வந்தாலுந் துவண்டாத இரும்புப் பெண்*
*தூரவே போய்விட்டாலும் தினமும் உன்னைக் கனவில் காண்கின்றோம்*
*என்புருகிப் போய் இன்று ஒன்பது ஆண்டுகள் ஆகினவே*
*எத்தனை இரவுகள் கழிந்தாலும் எமக்கு பகலாகத் தெரிகின்றாய்*
*உன் வயிற்றில் உதித்த செல்வங்கள் இப்போது எம் அருகே*
*உலகத்தை வென்றவராய் திகழ்கின்றார்கள் உனக்கும் பெருமைதான்!*

*நீயில்லா உலகம் எமக்கு நிம்மதியைத் தர மறுக்கின்றது*
*நித்தமும் உன் முகத்தை அசையாத உருவமாய் காண்கின்றோம்*
*தீயிலெரிந்த கானகம் போல் எம் முன்னால் வெறுமையே மிச்சம்*
*தாய்மையின் இலக்கணமாய் தாய் தந்தையரை போற்றியே வாழ்ந்தாய்*
*உயிராய் மதித்து உடன் பிறந்த உறவுகளை கலங்காமல் பேணி வந்தாய்*
*உத்தமி என்றும் பெயரெடுத்து உன்னவனின் இதயத்தில் தேனைத் தெளித்தாய்*
*காயிருந்த மரத்தில் கனியைக் காணா ஏக்கத்தை உன் இழப்பு தருகின்றது*
*காலம் கடந்தாலும் எம்மை அது வருத்தியே தொடரும்!*

*உன் பாதம் பதிந்த புற்தரைகள் பின்தோட்டத்தில் நீ ரசித்த பூச்செடிகள்*
*உயிராய் நீ நேசித்த உறவுகளின் இதயங்கள் உன்னை இழந்த துயரத்தில்*
*தன்னலம் கருதாமல் வாழ்ந்த நாட்களை நீ மகிழ்வோடு ஏற்று நின்று*
*தவிக்க விட்டுச் சென்றாய் உன்னை நேசித்தவர்கள் அனைவரையும்*
*இன்னும் நாம் உண்ணும் போதும் உறங்கும் போதும் உன் நினைவோடுதான்*
*இலகுவில் கிட்டாத ஒரு அரிய பொக்கிசம் எம் கரம் விட்டுச் சென்றதுபோல்*
*கண்மணியே உன் பிரிவை தாளாத் துயருடன் அனுபவிக்கும் காலம்*
*எம் உயிர் உள்ளவரை தொடரும் அது வரை நீ எம்மோடுதான்!*

உன் நினைவால் வாடும் பாசமுள்ள அப்பா, அம்மா, அன்புக் கணவர், பிள்ளைகள்,
சகோதர, சகோதரரிகள், மைத்துனர் மற்றும் மருமக்கள்

தொடர்புகளுக்கு: (647) 335-5841, (416) 754-7485

# இலங்கையில் ஆட்கடத்தில் தொடர்பிலான முக்கிய நபர் இந்தியாவில் கைது

- நடராசா லோகதயாளன்

இலங்கையில் மனித கடத்தல் தொடர்பிலான பல வழக்குகளில் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள 39 வயதான முகமது இம்ரான் கான் அல்லது ஹாஜா நஜர்பீடன் எனப்படுபவர், இந்தியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்திய தேசிய புலனாய்வு அமைப்பின் பெங்களூர் பிரிவினர் தொடர்ந்து இவரை கண்காணித்துவந்த பின்புலத்திலேயே இந்த வாரம் அவர் தமிழகத்தில் கைதுசெய்துள்ளனர்.

39 வயதான முகமது இம்ரான் கான் அல்லது ஹாஜா நஜர்பீடன் 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கையைவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் உள்ள ஒரு ஊரில் இவர் தலைமறைவாக வாழ்ந்துவந்த நிலையிலேயே இவரை கண்காணித்துவந்த தேசிய புலனாய்வு அமைப்பினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெங்களூரில் தேசிய புலனாய்வு பிரிவு பல மாதங்களாக ஹாஜா நஜர்பீடனின் நடமாட்டத்தை கண்காணித்து வந்துள்ளது. சர்வதேச மனித கடத்தல் சம்பந்தப்பட்ட விடயங்களில் இவர் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு கூறியுள்ளது.

இவர் தமிழகத்தின் இராமநாதபுரத்திலும் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்துள்ளார்.

இலங்கை பிரஜைகள் குழுவொன்று இந்தியா வந்து, உரிய ஆவணங்களின்றி கர்நாடகாவின் மங்களூரில் வசித்து வருவதை பொலிஸார் கண்டறிந்த பின்னரே இவர்களது பின்புலத்தில் உள்ளவர்கள் தொடர்பிலான விசாரணைகளை இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் மங்களூரில் 38 இலங்கை பிரஜைகளை இதுவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கையில் இருந்து தப்பிச்செல்லும் குற்றவாளிகள் தமிழ்நாடு வழியாக பெங்களூர் சென்று அங்கிருந்து மங்களூருக்கு செல்வதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று இந்தியாவின் தேசிய புலனாய்வு அமைப்பின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

இந்நிலையில், கைதுசெய்யப்பட்டுள்ள மனித கடத்தல்காரர் ஹாஜா நஜர்பீடனிடம் இந்திய தேசிய புலனாய்வு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர்.

குறிப்பாக கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு கடல் மூலம் செல்லும் நோக்கில், இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இடைத்தரகர்கள் மூலம் பெருந்தொகையான பணத்தை கொடுத்து, ஆபத்தான பயணத்தை முன்னெடுக்கின்றனர் என்று இந்தியா மற்றும் இலங்கை பொலிசார் தொடர்ந்து கூறி எச்சரிக்கின்றனர்.

ஆனாலும், சிறு சிறு குழுக்களாக அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறி, படகு மூலம் தமிழகம் வந்து அங்கிருந்து உள்ளூர் தரகரின் ஏற்பாட்டில் பல இடங்களில் தங்கவைக்கப்படுகின்றனர். பின்னர் ஒரு படகில் பயணிக்கும் அளவிற்கு ஆட்கள் சேர்ந்தவுடன், வெவ்வேறு நகரங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அவர்கள் ஒன்றிணைக்கப்பட்டு, கேரளா அல்லது கர்நாடகா கடற்கரை பகுதிகளிலிருந்து படகு மூலம் அனுப்பிவைக்கப்படுவதாக புலனாய்வு அமைப்பு கூறுகிறது.

அதேவேளை, அப்படிச் செல்பவர்களின் படகுகள் பலவேளைகளில் நடுக்கடலில் பழுதடைந்து, ஆபத்தான நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் சூழலில் பன்னாட்டு கடற்படையினரால் மீட்கப்படுகின்றனர்.

பல நாடுகள் ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொண்டு தமது நாட்டிற்கு வர வேண்டாம் என்று அறிவுறுத்தியிருந்தாலும், இப்படியான ஆபத்துக்களை அறிந்தும் தொடர்ந்தும் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆட்கடத்தல் கும்பல்களில் சிக்கி ஏமாறுவது தொடர்கதையாகி வருகிறது.

# கீரிமலைப் பகுதியிலுள்ள ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்க கடும் எதிர்ப்பு



- நடராசா லோகதயாளன்

யாழ்ப்பாணம் கீரிமலையில் உள்ள ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும் தீர்மானத்திற்கு ஒப்புதல் அளிக்க முடியாது என தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் பி.எம்.எஸ். சாள்ஸ் மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றபோதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் இதனைத் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய பணிகளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியுடன் நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி செயலகத்தினால் ஆலோசனை முன் வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து நகர அபிவிருத்தி அதிகார சபையின் 8 பணிகளிற்கான முன் அனுமதி கோரப்பட்டது. இதன்போது கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பிரதேசத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கும் தீர்மானத்திற்கும் ஒப்புதல் அளிக்குமாறு கோரப்பட்டது.



இது தொடர்பில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நீண்ட விவாதம் இடம்பெற்றது. இந்த விவாதத்தின்போது, தனியாரிடம் இருந்து சுவீகரிக்காத காணி எவ்வாறு வழங்கப்பட்டது. இதன்போது நாம் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் அல்ல நில உரிமையாளர்களிற்கான இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த தெல்லிப்பளை பிரதேச செயலாளர் முதல்கட்டமாக இந்த அனுமதி கோரினாலும் நில உரிமையாளர்களிற்கும் அந்த இழப்பீடு வழங்குவதாகவே தெரிவிக்கப்பட்டுள்ளதாக பதிலளித்தார்.

அந்த கட்டிடத்தை மாகாண சபைக்குத் தருமாறு கோரினோம். அல்லது அதனை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திடம் கொடுங்கள். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் வேண்டாம் என்றோ அல்லது மறுதலித்தாலோ தனியார் தொடர்பில் பரிசீலிக்கலாம். மாறாக நில உரிமையாளரின் ஒப்புதல் இன்றி பிடுங்கிய நிலத்தை எவ்வாறு இன்னுமொருவருக்கு வழங்குவது என வடக்கு



மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் கேளவி எழுப்பினார்.

அங்கே உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் பலர் நிலத்தை கோருகின்றனர். அத்தோடு அங்கே இருந்த மத அடையாளங்களை பாதுகாத்து தாருங்கள் என ஆறு.திருமுருகன் ஐயா கோருகின்றார். நீங்களோ அந்த நிலத்தை வீதி அபிவிருத்தி அதகார சபைக்கு வழங்க ஒப்புதல் தாருங்கள் என இன்றுதான் கோருகின்றீர்கள். இருந்தபோதும் கடந்த வாரமே தனியார் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பந்தம் எழுதி வழங்கி விட்டதாக படங்களுடன் செய்தி வந்துள்ளது. இது ஒரு ஏமாற்றுவேலை என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

அவ்வாறு எந்த தனியார் பல்கலைக் கழகத்திற்கும் இதுவரை அப்படி வழங்கவில்லை என நகர அபவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதி தெரிவித்தபோது.

தற்போது நகர அபவிருத்தி அதிகார சபையினருக்கு வழங்குவதற்கான அனு-மதிதானே அதனை வழங்குவோம் என இணைத் தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான பி.எம்.எஸ். சாள்ஸ் கோரினார்.

இதன்போது கருத்துரைத்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இந்த நிலம் காணி சுவாகரிப்புச் சட்டத்தின் கீழ் நில உரிமையாளரின் ஒப்புதல் இன்றி 38ஏஇன் கீழ் எடுக்கப்பட்டதல்லவா எனக் கோரியபோது தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சிவசிறி ஆம் எனப் பதிலளித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 38 கீழ் பாதுகாப்புத் தரப்பினருக்கு மட்டுமே நிலத்தை சுவீகரிக்க முடியும். அவ்வாறு இருக்க நகர அபிவருத்தி அதி-கார சபைக்கு நிலத்தை வழங்கும் கோரிக்கைக்கு எப்படி அனுமதி வழங்க முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

இதன் ஆரம்பமும் நடவடிக்கையும் பிழை-யாக இருப்பதனால் இந்த அனுமதியை வழங்க முடியாது என்றார் சுமந்திரன்.

அதனையடுத்து தலைமை அலுவலகத்துடன் உரையாடுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை பிரதிநிதிக்கு அறிவுறுத்தப்பட்டது.


MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

October 14, 2023

மானிப்பாய் இந்துக்கல்லூரி மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா

ஆண்டுப்பொதுக்கூட்டம் 2023

எமது சங்கத்தின் ஆண்டுப்பொதுக்கூட்டம் இம்மாதம் October 29, 2023 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00-5.30 வரை, Don Montgomery Recreation Centre, 2467,Eglinton Avenue East, Scarborough (Midland/Eglington),ON,M1K2R1ல் நடைபெறவுள்ளது. மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் , மாணவிகள்,அவர்தம் பிள்ளைகள் அனைவரையும் இப்பொதுக்கூட்டத்தில் பங்குபற்றி அவர்களது அங்கத்துவத்தை புதுப்பிப்பதோடு இந்த ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை அங்கத்தவர்களை தெரிவு செய்ய உதவுமாறும் மற்றும சங்கம் சிறப்பாக நடைபெற ஆலோசனைகளையும் , கருத்துக்களையும் கூறுமாறும் எமது சங்கம் உங்களை அன்பாக அழைக்கின்றது .

தொடர்புகட்கு;

| தலைவர் | | செயலாளர் |
|---|---|---|
| ராஜு கனகராஜா | சி. கணேசலிங்கம் | செ. பார்த்திபன் |
| (416 858 6316) | (416 499 6248) | (647 710 9404) |

**இங்கே பதிவு செய்யப்படும் பதிவு ஓர் காதல் கதை. இது 1985-1990 ம் இடையிலான காலகட்டத்தை சார்ந்த ஓர் கற்பனைக் கதை. இச்சிறு கதையின் மூலம் பெற்றோரிற்கான அருமையான தகவல் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகவல் எக்காலத்திற்கும் பொருத்தமானதே. இதனை ஓர் நாடக ரூபத்தில் தருகிறேன். ஆரம்பத்தில் சிறுது சலிப்பாக இருந்தாலும் போகப்போக சுவாரஸ்யமாக இருக்கும். இதோ நீங்கள் ஆவலுடன் காத்திருக்கும்,**

# “நின்னை சரணடைந்தேன்”

**கதாபாத்திரம்:**

| | |
|---|---|
| கதாநாயகன் | - கணேஷ் |
| கதாநாயகி | - மதுமிதா |
| கணேஷின் தந்தை | - சரவணமுத்து |
| தாயார் | - தருமவதி |
| மதுமிதாவின் தந்தை | - வேலாயுதம் |
| தாயார் | - சுசீலா |
| மதுமிதாவின் நண்பிகள் | - தாரணி, வாசுகி |
| மதுமிதாவின் வில்லி | - பொன்மதி |
| அதிபர் | - மிஸ் சோமசுந்தரம் |
| கனடா மாப்பிள்ளை | - பிரபா |

---------------
## காட்சி - 1
---------------

இப்ப இந்த இடத்தில் நீங்கள் காண்பது கதாநாயகி மதுவின் அம்மா சுசீலாவும் அப்பா வேலாயுதமும். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று போகப்போகத்தான் தெரியும்.

[அப்பா நெறளியிநச வாசிக்கிறார்... அம்மா வீடு கூட்டுகிறா... மகள் புத்தகத்தை கையில் ஏத்தி வருகிறாள்]

மது: அம்மா நான் பொய்யிட்டு வாறன்.

சுசீலா: பிள்ளை வழியில தெருவில பாத்துப்போ. பின்னாலை முன்னாலை வாகனம் வரும் கவனம் அம்மாச்சி.

வேலாயுதம்: மது காலம் கெட்டுப்போய் கிடக்கு, படிக்க போனோமா வந்தமா எண்டு இருக்க வேணும்.

மது: ஒண்டுக்கும் கவலைப்படாதையுங்கோ அப்பா, ஏன் உங்கடை பிள்ளையைப்பற்றி உங்களுக்கு தெரியாதே அப்பா. சரி நான் பொய்யிட்டு வாறன், வெளியில் தரணியும், வாசுகியும் காத்துக்கொண்டு நிக்கினம்.

[மது கிளம்பிச்செல்கிறாள்]

சுசீலா: பாத்தீங்களே அப்பா, எங்கடை பிள்ளை எவ்வளவு அருமையான பிள்ளை எண்டு. கடவுளே மது இப்படியே இருந்திட வேணும்.

வேலாயுதம்: சரி...சரி எதுக்கும் ஒரு கண் இருக்கட்டும். இந்தக்காலப் பிள்ளையளை எப்படி நம்பிறது?

[என்கிறார் வேலாயுதம் கண்ணாடியை சரி செய்தபடி. இருவரும் கிளம்பிச்செல்கிறார்கள்]

---------------
## காட்சி - 2
---------------

மது மிகவும் ஆற்றல் மிக்கவள், எப்ப பார்த்தாலும் அறிவு சம்மந்தமான விடயங்களையே பேசுவாள். அடுத்து நண்பி தாரணி, இவளை எல்லோரும் செல்லமாக குண்டுத்தாரணி என்றே அழைப்பார்கள். மற்றவள் வாசுகி, எப்போதும் சிரித்துவிட்டு மவுனமாக இருந்து விடுவாள். அடுத்து இங்கே என்ன என்று பார்ப்போம்...

மது: தாரணி உன்னட்டை ஒண்டு கேக்க வேணும் எண்டு நினைச்சனான், மறந்து போனன்.

தாரணி: சொல்லுதாயே சொல்லு, வேறை என்ன எதாவது படிப்பைப்பற்றித்தானே கேட்கப்போறாய்.

மது: இல்லை தாரணி, நேற்று tuition class இல வடிவேல் master chemistry இல buffer solution பற்றி படிப்பிச்சவர், எனக்கெண்டால் ஒண்டும் விளங்கேலை.

தாரணி: எங்களுக்கு தமிழிலை சொல்லு, அதென்ன buffer solution? பொறு வாறன், உதெல்லாம் உனக்கு என்னெண்டு தெரியும்?

மது: மாஸ்டர் இடைக்கிட English இல சொல்றதை நான் knowledge காக எழுதி வைக்கிறனான்.

தாரணி: அதுசரி இருக்கிற மழெறடநனபந காணாதெண்டு உது வேற உனக்கு.

[வாசுகி மௌனமாக சிரிக்கிறாள்...தாரணி வாசுகியைப்பார்த்து]

தாரணி: நீ சிரி, சிரிக்கிறதை விட்டா உனக்கு என்ன தெரியு?

---------------
## காட்சி - 3
---------------

[இவன்தான் கதாநாயகன் கணேஷ். பாவம் இந்த இடத்தில தினமும் நிற்பான். இவன் யாருக்காக இப்படி கால்கடுக்க காத்திருக்கிறான்? சொல்லியா தெரிய வேண்டும், ஆ... நம்ம மதுமிதா அக்காவிற்காகத்தான்.]

[கணேஷ் ஒரு கையில் புத்தகம், மறு கை பொக்கெட்லுமாய் நின்றான். அப்போ அங்கெ வரவைழைெ உடயளள முடிந்து மது, தாரணி, வாசுகி மூவரும் வருகிறார்கள். கணேஷைக் காண்கிறார்கள்]

தாரணி: ஏய், அங்கை பாருங்கடி, இந்தப்பெடியன் எப்ப பாத்தாலும் நாங்கள் வாற நேரம் இந்த இடத்தில் நிக்கிறான், மது நீ கவனிச்சனியா?

[மது தலையைகுனிந்த வண்ணம் நடக்கிறாள், வாசுகி மௌனமாக சிரிக்கிறாள்]

மது: தாரணி சும்மா சத்தம் போடாமல் வா பாப்பம். அவன் எங்க நிண்டால் என்ன, என்ன செய்தால் உனக்கென்ன?

தாரணி: இல்லை இல்லை இந்த சந்தேகத்தை நான் தீர்க்காமல் விடன். ஐயோ எனக்கு ஒரே குழப்பமா இருக்கு.

மது: அது சரி, school இல tuition class இல வாற சந்தேகங்களைப் பற்றி எப்பவாவது கவலைப்படிருக்கிறியா? அந்தப்பெடியன் ஏன் அந்த இடத்தில நிற்கிறான் எண்ட பிரச்சனைதான் இப்ப பெரிசாப்போச்சு. சிலவேளை அவன் உன்னைத்தான் சைட் அடிக்கிறானோ தாரணி?

தாரணி: (சிரித்தபடி) பிறகென்ன நீயும் பகிடிவிடப்பழகிவிட்டாய் மது. இந்த குண்டம்மாவைத்தான் அவன் சைட் அடிக்கப்போகிறான் இப்ப.

மது: சரி பசைடள நான் போயிற்று வாறன், நாளைக்கு சந்திப்பம், வயவய.

---------------
## காட்சி - 4
---------------

மதுவின் தந்தை வேலாயுதம் ஓர் கணக்காளர். கள்ள கணக்குப்போட்டு காசெடுக்கிறவர் என்று கேள்வி. ஆருக்கு தெரியும்? நாங்கள் இப்பதானே ளாயசந அயசமநவ, ளவழஉம அயசமநவ பற்றி கதைக்கிறம். அவர் அந்த காலத்திலேயே உதெல்லாம் அறிந்தவர். எப்ப பாத்தாலும் மதுவுடன் படிப்பைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருப்பர்.

[அம்மா தரைஉந கொண்டு வருகிறா... அப்பா paper படிக்கிறார்]

சுசீலா: பிள்ளை மது களைச்சுப்போய் வந்திருக்கிறாய், இதை குடியடா. இண்டைக்கு உனக்குப்பிடித்த நண்டுகுழம்பு, அதுவும் நல்லா வறட்டி வச்சிருக்கிறன், சாப்பிடம்மா.

வேலாயுதம்: அம்மா மது படிப்பு பாடம் எல்லாம் எப்படிப்போகுது? முக்கியமாக maths எப்படி அம்மா? அந்தக்காலத்தில நான் maths இல புலி. உவன் சங்கரப்பிள்ளை maths master இருக்கிறான், அவனுக்கும் எனக்கும்தான் படிக்கிற காலத்தில போட்டி. Engineer ஆ வரவேண்டியனான் Account ஆ வரவேண்டியதாப்போச்சு.

சுசீலா: பொறுங்கோ வாறன், பள்ளிகூடத்தால வந்த பிள்ளையை சாப்பிட விடாமல் கதைத்துக்கொண்டு இருக்கிறியள். எப்ப பாத்தாலும் படிப்புக்கதையும் புளுகுக் கதையும்தான். பிள்ளை மது நீ போய் சாப்பிடடா.

மது: எனக்கு இப்ப பசிக்கேல அம்மா, இரவுக்கு புட்டு அவியுங்கோ நண்டுக்குழம்போடை சாப்பிடுறன்.

சுசீலா: படிக்கிறபிள்ளை நீ, உனக்கில்லாததே, அவிச்சாப்போச்சு (என இரு கைகளையும் சேர்த்து தட்டுகிறார்)

வேலாயுதம்: அட என்ரை சுசீலாவுக்கு கும்மி அடிக்கவும் வருகுது. ம் ம் ம் .....சரி எனக்கு கொஞ்சம் தோட்ட வேலை கிடக்கு, நீ போய்ப் படி மது.

[அப்பா தொட்டத்திற்குள் வேலை செய்யச் செல்கிறார், அம்மா அடுக்களை நோக்கிச் செல்கிறார், மது படிக்கச் செல்கிறாள்]

---------------
## காட்சி - 5
---------------

இப்படியாக காலம் கடந்து செல்கிறது. ஒரு நாள் சுகவீனம் காரணமாக மது tuition class இற்கு செல்லவில்லை. தாரணியும் வாசுகியும் மட்டுமே சென்றார்கள். இங்கே என்னதான் நடக்கப்போகிறது என்று இருந்துதான் பார்ப்போமே!

[தாரணியும் வாசுகியும் வருகிறார்கள்....கதாநாயகன் கணேஷ் அவர்கள் இருவர் அருகில் செல்கிறான்]

கணேஷ்: தாரணி ப்ளீஸ் கொஞ்சம் நில்லுங்கோ, எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்யவேணும். இந்த ஐ மதுமிதாவிடம் குடுக்கணும்.

[தாராணியும் வாசுகியும் திகைத்துப்போய் ஆளை ஆள் நோக்குகிறார்கள்]

தாரணி: ஐயோ, என்னால இந்த தரகர் வேலை எல்லாம் பாக்கமுடியாது. மதுமிதா வீட்டில் நான் நல்ல பிள்ளை எண்டு என்னோட அவர்கள் நல்லமாதிரி. அவங்களுக்கு நான் நம்பிக்கை துரோகம் செய்ய மாட்டேன். அது மட்டுமல்ல மது இதுக்கு சம்மதம் தெரிவிப்பாளோ தெரியாது. அவளின்டை நோக்கமெல்லாம் படிச்சு பெரியாளா வரவேண்டும் என்பதுதான். கடைசி வந்தாலும் நான் உந்த விசயத்திற்கு உடன்படமாட்டன். அதோடை என்ரை வீட்டை தெரிஞ்சா என்னை கொண்டு போடுவினம்.

கணேஷ்: ப்ளீஸ் தாரணி ப்ளீஸ், எப்படியாவது இந்த உதவியை நீங்கள் எனக்குச்செய்தே ஆகணும். உங்களை விட்டா எனக்கு யாருமே help பண்ண மாட்டாங்க. மதுவை நான் உயிருக்குயிரா நேசிக்கிறேன், please help பண்ணுங்க.

தாரணி: நீங்க மட்டும் விரும்பினா போதுமா? மதுவும் அல்லா உங்களை விரும்ப வேணும். இந்த காதல் கத்தரிக்காய் எல்லாம் மதுவுக்கு அப்பாற்பட்ட விஷயம். தயவுசெய்து அவளின்ர வாழ்க்கையில குறுக்கிட வேண்டாம். அது சரி எங்கடை பெயர் எல்லாம் உங்களுக்கு எப்படித்தெரியும்?

கணேஷ்: sorry! அது அது....என்னுடைய பக்கத்து வீட்டுப் பிள்ளை tuition class இல உங்கட வகுப்புதான். பெயர் ”பொன்மதி”, அவரிடம் இருந்துதான் எல்லா details உம் எடுத்தனான். அப்படியே மதுமிதாவைப்பற்றியும் தெரிந்து கொண்டன். மதுமிதா எனக்கு வேணும். அவ எனக்கு வேணும். (கணேஷ் அழுகிறான்....)

நீங்களாவது help பண்ணுங்க வாசுகி, ப்ளீஸ் ....ப்ளீஸ் ....

கணேஷ் அளுவதைப்பார்த்த தாராணியும் வாசுகியும் ஆளை ஆள் பார்க்கிறார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப்போய் நிற்கிறார்கள். இறுதியாக இருவரும் ஒரு முடிவுக்கு வந்தவர்களாக, தலையை சம்மதம் தெரிவித்து ஆட்டினர்.

தாராணி: உங்களைப்பார்க்க எனக்கு சரியான பாவமா இருக்கு. சரி தாங்கோ letter ஐ, நான் மதுவிடடை கூடுக்கிறேன். ஆனால் என்னால letter ஐ மட்டும்தான் குடுக்க முடியும், மதுவிட மனசில காதலை வளர்க்க முடியாது. அதை நீங்கள்தான் செய்ய வேணும். (தாரணி letter ஐ வாங்கி புத்தகத்தினுள் வைக்கிறாள்)

கணேஷ்: Thanks தாரணி, உங்களுக்கு எப்படி நன்றி சொல்லுறதென்றே எனக்கு தெரியல. இந்த உதவியை நான் எண்டைக்குமே மறக்கமாட்டேன். உங்களுக்கு என்ன உதவி வேணுமானாலும் என்னட்டை கேட்கலாம்.

தாரணி: பரவாயில்லை, எப்படியாவது மதுவின் கனவுகளை நிறைவேற்றினால் சரி.

[இரு தரப்பினரும் பிரிந்து செல்கின்றனர்]

தாரணி: ஹலோ ஹலோ சொன்னாப்போல உங்கட பெயர் என்ன?

கணேஷ்: “கணேஷ்”

தாரணி: பாத்தியா வாசுகி, அண்டைக்கே நான் உங்களுக்கு சொன்னனான் இந்த பெடியன் யாருக்கோ காத்துக்கொண்டு நிக்கிறான் எண்டு. நான் நினைச்சது சரியாப்போச்சு. ஆனால் அதை மதுவிட்டை சொல்லேலை. என்ரை பரநளள ஒரு நாளும் பிழைக்காது. “தாராணியா கொக்கா”!

**(தொடரும்...)**

# யாருடைய நிலம், யாருடைய வரலாறு? – அஷ்வின் சங்கி

பாலஸ்தீனிய சிக்கலுக்கு யார் காரணம் என அதன் மிகவும் உரத்த ஆதரவாளர்களிடம் கேளுங்கள். இஸ்ரேல் ஒரு காலனித்துவவாத நாடு, பாலஸ்தீனியர்களின் நிலங்களைப் பறித்த நாடு என்று அவர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்.
முதலாம் உலகப் போர் வரை இப்பகுதி உதுமானியன் ஆட்சியின் கீழ் இருந்ததாகவும், 1917 ஆம் ஆண்டின் நியாயமற்ற பால்ஃபோர் பிரகடனத்தால் **(Balfour Declaration of 1917)** யூதர்கள் முஸ்லீம் நிலங்கள் மீது திணிக்கப்பட்டனர் என்றும் அவர்கள் வாதிடுகின்றனர். பால்ஃ. போர் பிரகடனம் ”யூத மக்களுக்கு ஒரு தேசிய தாயகம் தேவை” எனக் கற்பனை செய்ய வைத்தது.



ஆனால் குடியேற்றவாதிகள் கூறுவது உண்மை என்று நாம் கருதினால், உதுமானியன்களுக்கு முன்பு யார் ஆட்சி செய்தார்கள் என்ற கேள்வியையும் நாம் கேட்க வேண்டும். கிறிஸ்தவ சிலுவைப்போர் வீரர்கள் 1099 ஆம் ஆண்டில் ஜெருசலேமைக் கைப்பற்றினர். 1187 இல் சலாடின் இந்த நகரத்தை முஸ்லிம்களுக்காக மீண்டும் கைப்பற்றினார்.

உதுமானிய சுல்தான் முதலாம் செலிம் **(Ottoman Sultan Selim I)** 1517 இல் பொறுப்பேற்கும் வரை கிறித்தவ மற்றும் முஸ்லிம் கட்டுப்பாட்டில் மாறி மாறி காலங்கள் தொடர்ந்தன. அடுத்த 400 ஆண்டுகளுக்கு, இந்தப் பகுதி உதுமானிய சிரியா என்ற நிர்வாக அலகின் ஒரு பகுதியாக இருந்தது, இதில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் யூதர்கள் இருந்தனர்.

1800 களின் பிற்பகுதியிலிருந்து கிழக்கு அய்ரோப்பா மற்றும் உருசியாவிலிருந்து யூதர்களின் தொடர்ச்சியான வரவு இருந்தது என்பது உண்மைதான். ஆமாம், யூதர்களின் வருகை அதிகரித்தது. உள்கட்டமைப்புத் திட்டங்களில் பணியாற்ற எகிப்து மற்றும் சிரியாவிலிருந்து அரேபியர்களின் வருகையும் இருந்தது என்பது பெரும்பாலும் கவனிக்கப்படவில்லை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, நாசி ஜெர்மனி மற்றும் ஆஸ்திரியாவிலிருந்தும் புதிய அலைகளாக யூதர்களின் வருகை இருந்தன.

ஐ.நா. இப்பகுதியை தனித்தனி யூத மற்றும் அரபு நாடுகளாகப் பிரித்தது. அத்துடன் அனைத்துலக அளவில் நிர்வகிக்கப்படும் ஜெருசலேமுடன், யூதர்கள் இந்தத் தீர்வை ஏற்றுக்கொண்டனர். ஆனால் அரேபியர்கள் அதை நிராகரித்தனர். இஸ்ரேல் பிறந்தவுடனே எகிப்து, சிரியா, ஜோர்டான், ஈராக், லெபனான் ஆகிய நாடுகளால் இஸ்ரேல் தாக்கப்பட்டது.

முரண்பாடாக, போர் இஸ்ரேல் நிலப்பரப்பை ஒருங்கிணைக்க உதவியது, ஆனால் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் இடம்பெயர்ந்தனர். ஏமன், ஈராக் போன்ற அரபு நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான யூதர்கள் வெளியேற்றப்பட்டு இஸ்ரேலில் குடியேற வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர் என்பது மீண்டும் மறக்கப்படுகிறது.

யூத மனநிலையில், அவர்கள் இப்போதுதான் வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஆதியாகம புத்தகத்தின்படி, கடவுளுக்கும் ஆபிரகாமுக்கும் (கிமு 2000 வாக்கில்) இடையே ஒரு உடன்படிக்கை இருந்தது, அதில் கடவுள் தனது சந்ததியினருக்கு கானான் **(Canaan)** நாட்டை (தோராயமாக இன்றைய இஸ்ரேல், பாலஸ்தீன பகுதிகள், லெபனான், சிரியா மற்றும் ஜோர்டான்) வழங்குவதாக வாக்களித்தார். அந்த வகையில், யூதர்கள் வெறும் 400 ஆண்டுகள் அல்ல, 4,000 ஆண்டுகள் பூர்வீகக் குடிமக்களாக இருந்தனர். எருசலேம் என்ற பெயர் பழைய ஏற்பாட்டில் பல நூறு முறை வருகிறது.

இந்தப் பகுதியிலிருந்து யூதர்கள் நாடுகடத்தப்படுவதும் திரும்புவதும் வரலாறு முழுவதும் ஒரு தொடர்ச்சியான நடைமுறையாக இருந்தது. எடுத்துக்காட்டாக, ஆபிரகாமின் பேரன் யோசேப்பு காலத்தில் பஞ்சம் ஏற்பட்டது. பலர் வேலைக்காக எகிப்துக்குச் சென்றனர், ஆனால் ஒரு புதிய எகிப்திய பாரோ **(pharaoh)** அவர்களின் வருகையால் எழும் அச்சுறுத்தலை உணர்ந்தார். அதனால் அவர்களை அடிமைப்படுத்தத் தொடங்கினார். மோசேயும் அவருக்குப் பின் வந்த யோசுவாவும் இறுதியில் 12 கோத்திரங்களுக்கு குழுவை தங்கள் சொந்தத் தாய்நாட்டிற்கு அழைத்துச் சென்று அந்தப் பகுதியை 12 கோத்திரங்களுக்கு இடையில் பிரித்துக் கொடுத்தனர்.

கி.மு. 1000 ஆம் ஆண்டு வாக்கில் தாவீது அரசர் **(King David)** பழங்குடியினரை ஒன்றிணைத்து எருசலேமைத் தலைநகராக நிறுவினார். அவரது மகன் சாலமோன், கோவில் மலையில் முதல் கோவிலைக் கட்டினார். கிமு 586 இல் பாபிலோனியர்களால் இந்த ஆலயம் அழிக்கப்பட்டபோது, பல யூதர்கள் பாபிலோனியரால் (இன்றைய ஈராக்) சிறைபிடிக்கப்பட்டனர்.

பல பத்தாண்டுகளுக்குப் பிறகு அக்கேமெனித் **(Achaemenid)** மன்னன் இரண்டாம் சைரஸ் **(Cyrus II)** பாபிலோனியர்களைத் தோற்கடித்து, திரும்பி வந்த யூதர்களால் இரண்டாவது கோவிலைக் கட்ட அனுமதித்தபோதுதான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். 1978 இல் போனி-எம் (டீழநெல-ஆ) இயக்கிய அந்தப் படத்தின் பாடல் வரிகள் நினைவிருக்கிறதா? ”பாபிலோன் நதிகளின் அருகே” என்பது பைபிளின் சங்கீதம் 137 ஐ உள்ளடக்கியது. மற்றும் யூதர்கள் தங்கள் தாயகத்தில் இருந்து பிரிக்கப்பட்டதில் உள்ள வேதனையை அது வெளிப்படுத்தியது.

**The Dome of the Rock (Qubbat al-Sakhra), Umayyad, stone masonry, wooden roof, decorated with glazed ceramic tile, mosaics, and gilt aluminum and bronze dome, 691-2, with multiple renovations, patron the Caliph Abd al-Malik, Jerusalem (photo: Orientalist, CC BY 3.0)**

அடுத்து, யூதர்கள் ஹெலனிஸ்டிக் **(Hellenistic)** படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தனர். கி.பி. 312 இல் உரோமப் பேரரசர் கான்ஸ்டன்டைன் **(Roman Emperor Constantine)** கிறித்தவ மதத்திற்கு மாறியபோது, எருசலேமில் கிறிஸ்தவ புனிதத் தலங்கள் கட்டப்பட்டன. கி.பி. 637 இல் யூதர்களும் கிறித்தவர்களும் ரஷீதுன் கலீபாவால் (**Rashidun Caliphate**) நசுக்கப்பட்டபோது, மலைக் கோயில் பாறைக் குவிமாடம் இரண்டும் **(Dome of the Rock)** மற்றும் அல்-அக்ஸா மசூதி ஆகியவற்றின் தளமாக மாறியது. யூதர்கள் மீண்டும் தங்கள் புனித இடத்தை இழந்தனர், இப்போது மேற்குச் சுவரில் பிரார்த்தனை செய்ய மட்டுமே அனுமதிக்கப்பட்டனர்.

இந்தக் கதையை கா்ஷ்மீரின் கண்ணோட்டத்தில் பார்க்காமல் இருக்க முடியாது. காஷ்மீர் ஒரு காலத்தில் செழிப்பான சைவ மற்றும் பவுத்த நாகரி-கமாக இருந்தது. 1990 களில் காஷ்மீர் பண்டிட்டுகளின் வெளியேற்றத்தைப் பற்றி நாங்கள் விவாதிக்கிறோம், ஆனால் மக்கள்தொகை மாற்றங்கள் 14 ஆம் நூற்றாண்டில் சிக்கந்தரின் கீழ் தொடங்கின என்பதை மறந்துவிடுகிறோம், அவர் இந்து பண்டிகைகள், சடங்குகள் மற்றும் மரபுகள் ஆகியவற்றிற்கு முழுமையான தடையை விதித்தார்.

இந்துக்கள் சிறுபான்மையினராக மாறும் வரை அடுத்தடுத்து வந்த மன்னர்கள் இந்துக்களை மதம் மாற்றுவதை அல்லது வெளியேற்றுவதை உறுதி செய்தனர். 1947 வாக்கில், பெருமளவில் மக்கள்தொகை சமநிலையில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் ஏற்றத்தாழ்வு காஷ்மீரை உரிமை கோர பாகிஸ்தானுக்குத் தைரியம் அளித்தது. கா்ஷ்மீர் இந்துக்கள் இப்போது பெரும்பான்மையாக இல்லை என்பதற்காக விலகி இருக்க வேண்டுமா? அவர்களுக்கு பூர்வீக உரிமை இல்லையா?

ஆனால், ஐரோப்பியக் குடியேற்றக்காரர்களால் அவர்களிடமிருந்து திருடப்பட்ட நிலங்களுக்கு பூர்வீக அமெரிக்கர்கள் பொறுப்பேற்கவில்லையா என்று ஒருவர் கேட்கலாம். அவுஸ்திரேலியாவின் பழங்குடி சமூகத்தின் நிலை என்ன? கனடா, தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து, இலத்தீன் அமெரிக்கா மற்றும் உலகின் பல பகுதிகளில் இடப்பெயர்வுக்கான எடுத்துக்காட்டுகள் ஏராளமாக உள்ளன.

“ஆதி“க் குடியிருப்பாளர்களைக் கண்டுபிடிக்க எத்தனை அடுக்குகளைத் தோண்ட வேண்டும்? “அசல்“ என்பதற்கு முந்தைய அடுக்கு எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவின் ஒரு பகுதியாக இல்லாவிட்டால் என்ன செய்வது? உறுதியான பதில் இல்லை, மேலும் கேள்விகள் மட்டுமே உள்ளன.

கட்டுரையாளர் பல புனைகதைகளின் ஆசிரியர் ஆவார். ( ஆங்கில மூலம் **https://www.msn.com/en-in/news/world/whose-land-and-whose-history-is-it-any-way/ar-AA1iIYT5.** - *தமிழாக்கம் நக்கீரன்*)

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

## அறிவித்தல்

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர்களது பெற்றோர், சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.
கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர்களது குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-19.11.2023.**

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் நினைவேந்தல் எதிர் வரும் **19.11.2023** ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அறியத் தருகின்றது.

மாவீர்களுக்கான வீர வணக்க நினைவேந்தல்,காலை **10.00** மணிக்கு ஆரம்பமாகி மதியம் **2.00** மணி வரை தொடர்ந்து நடை பெறும்.

மாவீர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் இந்த நாளில் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்.

மண்டப முகவரி: **Metropolition Centre. 3840 Finch Ave. East, M1T 3T4**

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.
நன்றி. வணக்கம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619 **ctro@tamilremembrance.com**

# பெட்ரோல் குண்டு வீசப்பட்ட விவகாரம் : ஆளுநர் மாளிகையின் புகாருக்கு டிஜிபி மறுப்பு

பெட்ரோல் குண்டு வ்சப்பட்ட விவகாரத்தில் ஆளுநரின் புகாருக்கு டிஜிபி சங்கர் ஜிவால் விரிவான விளக்கம் அளித்துள்ளார். இதுதொடர்பாக டிஜிபி சங்கர் ஜிவால் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:25.10.2023 அன்று மதியம் 3 மணியளவில், கருக்கா வினோத் (42) கிண்டி சர்தார் படேல் சாலை வழியாக ஆளுநர் மாளிகை அருகே தனியாக பாதசாரி போன்று நடந்து வந்தார். அவர் பெட்ரோல் நிரம்பிய4 பாட்டில்களைக் கொண்டுவந்து, அவற்றை ஆளுநர் மாளிகை அமைந்துள்ள சர்தார்படேல் சாலையின் எதிர்ப்புறத்தில் இருந்து எறிய முற்பட்டபோது, ஆளுநர் மாளிகை வெளிப்புறத்தில் பாதுகாப்புப் பணியிலிருந்த தமிழக போலீஸாரால் தடுக்கப்பட்டார். கைது செய்யப்படுவதற்கு பயந்து, சம்பவ இடத்துக்கு எதிரே சற்று தூரத்திலிருந்து 2 பாட்டில்களை வீசினார். அவை ஆளுநர் மாளிகையின் அருகேசர்தார் படேல் சாலையில் வைக்கப்பட்டிருந்த தடுப்பரண்களுக்கு அருகே விழுந்தது.




பின்னர், அவர் ஆளுநர் மாளிகையின்பிரதான வாயிலிலிருந்து சுமார்30 மீட்டர் தூரத்தில், பாதுகாப்பு போலீஸாரால் உடனடியாக கைது செய்யப்பட்டார். இச்சம்பவத்தால், பொருட்களுக்கோ அல்லது எந்த நபருக்கோ எவ்வித சேதமோ, காயமோ ஏற்படவில்லை.கண்காணிப்புக் கேமரா பதிவுகளை ஆராய்ந்ததில், சம்பந்தப்பட்ட நபர் தேனாம்பேட்டையிலிருந்து, சம்பவ இடம் வரை தனியாகவே வந்துள்ளார். தற்போது அவர் கிண்டிபோலீஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்குஉட்படுத்தப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டுள்ள வினோத் மீது 14 வழக்குகள் நிலுவையில் உள்ளன. இவர் இதேபோல் 3 இடங்களில் வீசியுள்ளார். அந்த வழக்குகளிலும் கைது செய்யப்பட்டுள்ளார்.ஆளுநருக்கு எதிராக பகிரங்க மிரட்டல், அவதூறுப் பேச்சுமற்றும் தாக்குதல் போன்ற பல்வேறு சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகவும், அவை தொடர்பாக காவல்துறையினர் நியாயமான முறையில் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யவில்லை எனவும், மேலும் அச்சம்பவங்கள் தொடர்பாக எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என குறிப்பிட்டு, 25.10.2023ல் மருத்துவர் செங்கோட்டையன் (ஆளுநரின் துணைச் செயலாளர்) புகார் அளித்துள்ளார்.

25.10.2023ல்நடந்தசம்பவம்ஒருதனிப்பட்டநபரால் ஆளுநர் மாளிகைக்கு வெளியே சர்தார்படேல் சாலையில் நடத்தப்பட்டசெயலாகும். இந்த நிகழ்வில்புகாரில் தெரிவிக்கப்பட்டதுபோல் ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்களால் பெட்ரோல் குண்டுவீசப்பட்டது எனவும், அவர்கள்அத்துமீறி ஆளுநர் மாளிகையினுள் நுழைய முற்பட்டு ஆளுநர்மாளிகை வாயிற் காப்பாளர்களால் (ஷிமீஸீமீ கூஷீஹ்) தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்கள் எனவும், மேலும்அங்கு வீசப்பட்ட பெட்ரோல் குண்டு வெடித்தது என்றும் சொல்வது அனைத்தும் உண்மைக்கு முற்றிலும் புறம்பானது.அதேபோல் ஏப்ரல் 19, 2022 ல் மயிலாடுதுறை சென்றபோது ஆளுநரின் வாகனம் தாக்கப்பட்டது என்றும், இது சம்பந்தமாக காவல்துறையில் புகார் தெரிவிக்கப்பட்டும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்பதும் உண்மைக்கு புறம்பானது.ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் அப்பகுதியை கடந்து சென்றபின்னர் அங்குகூடியிருந்தவர்களில் சிலர் கருப்புக்கொடிகளை சாலையில் வீசினர். அக்கொடிகள் ஆளுநரின் வாகனம் மற்றும் கான்வாய் முழுமையாக சென்றபின் பின்னால் வந்த வாகனங்கள் மீது விழுந்தன.இச்சம்பவம் தொடர்பாக மயிலாடுதுறை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு73 பேர் கைது செய்யப்பட்டனர். மேற்படி வழக்கு புலன் விசாரணையில் உள்ளது. மேற்படி சம்பவங்கள் அனைத்துக்கும் காணொளி ஆதாரங்கள் உள்ளன.

**இந்திய செய்திகள்**

மேலும், ஆளுநரின் கான்வாய் மீது கற்கள் மற்றும் கட்டைகள் வீசப்பட்டன என்பது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.மேலே குறிப்பிட்டுள்ளதுபோல எந்தவித சம்பவங்களும் நடைபெறவில்லை. ஆளுநர் மாளிகையின் பாதுகாப்புக்காக சர்தார்படேல் சாலையில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சென்னை பெருநகர காவல்துறையின் பாதுகாப்புக் காவலர்கள் விழிப்புடன்இருந்த காரணத்தாலும், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாலும், உடனடியாககுற்றவாளி கைது செய்யப்பட்டார்.மேற்படி வழக்கில் முழுமையான விசாரணை மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே, கண்காணிப்பு கேமரா பதிவுகள் முழுமையாக சேகரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி வழக்கில் முழுமையான நியாயமான விசாரணை மேற்கொள்ளப்படும். ஆளுநருக்கும் மற்றும் அவரது மாளிகைக்கும் தமிழ்நாடு காவல் துறையினரால் உரிய பாதுகாப்பு தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மகளிர் உரிமைத்தொகை கோரி 12 லட்சம் பேர் மேல்முறையீடு: அமைச்சர் உதயநிதி தகவல்



மகளிர் உரிமைத்தொகை கோரி 12 லட்சம் பேர் மேல்முறையீடு செய்துள்ளதாகவும், தகுதியானவர்களுக்கு நிச்சயம் உரிமைத்தொகை கிடைக்கும் என்றும் அமைச்சர் உதயநிதி கூறினார். விருதுநகர் மாவட்டம் சாத்தூர் கோட்டாட்சியர் அலுவலகத்தில், மகளிர் உரிமைத்தொகை கோரி மேல்முறையீடு செய்தவர்களின் விவரங்கள் சரிபார்ப்பு பணியை அமைச்சர் உதயநிதி நேற்று ஆய்வு செய்தார். அப்போது, மேல்முறையீடு செய்த இருவரை தொலைபேசியில் அழைத்து விசாரித்தார்.

தொடர்ந்து, மேல்முறையீட்டு மனுக்கள் தொடர்பான ஆய்வைவிரைவுபடுத்துமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.பின்னர் அமைச்சர் உதயநிதிசெய்தியாளர்களிடம் கூறியதாவது: மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை கடந்த செப். மாதம்தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார். தகுதியான 1.6 கோடி மகளிரின் வங்கிக் கணக்கில் உரிமைத்தொகை செலுத்தப்பட்டது. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

30 நாட்களுக்குள் அவர்கள் மேல்முறையீடு செய்யவும் அவகாசம் அளிக்கப்பட்டது.மேலும், விடுபட்டவர்கள் மேல்முறையீடு செய்ய இரண்டு கட்டங்களாக வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. மேல்முறையீடு செய்வதற்கு 2 நாட்கள் சிறப்பு முகாம்களும் நடத்தப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசிடம் உள்ள தகவல் தரவுகள் மூலம் சரிபார்க்கப்பட்டன. அரசு அலுவலர்கள் மூலம் நேரடி கள ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.கடந்த 24ம் தேதியுடன் காலக்கெடு முடிவடைந்த நிலையில், 30 நாட்களுக்குள் பரிசீலனை செய்துமுடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாநில அளவில் 11.85 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மேல்முறையீட்டு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர். தகுதியான பயனாளிகளுக்கு நிச்சயம் உரிமைத்தொகை கிடைக்கும்.

அதற்கான பணிகள் விரைவுபடுத்தப் பட்டுள்ளன.சென்னையில் ஆளுநர் மாளிகை முன் பெட்ரோல் குண்டுவீசப்பட்ட சம்பவம் குறித்து காவல்துறை அறிக்கை அளித்துள்ளது. எந்த மாதிரியான வன்முறையாக இருந்தாலும் அது கண்டிக்கத்தக்கது. இந்த விவகாரத்தில் தமிழக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். இவ்வாறு அமைச்சர் உதயநிதி கூறினார்.ஆய்வின்போது, அமைச்சர்கள் சாத்தூர் ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, சிறப்புத் திட்டங்கள் அமலாக்கத் துறை செயலர் தாரேஷ் அகமது, மாவட்ட ஆட்சியர் வீ.ப.ஜெயசீலன் உடனிருந்தனர்.

# சென்னை மாநகராட்சி சார்பில் புதிய பூங்கா, விளையாட்டு திடல்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்



மாநகராட்சி சார்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் விளையாட்டு திடல், புனரமைக்கப்பட்ட குளங்களை சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். சென்னை மாநகராட்சி சார்பில் 199வது வார்டில் பாலாஜி நகரில் ரூ.67 லட்சத்து 47 ஆயிரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பூங்கா,194வது வார்டில் ரூ.1 கோடியில்புனரமைக்கப்பட்ட வண்ணன்கேணி, தாச்சன் கேணி குளங்கள், 196வது வார்டு, கண்ணகி நகரில் ரூ.87 லட்சத்து 14 ஆயிரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுத் திடல் ஆகியவற்றை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு நேற்று திறந்து வைத்தார்.

இத்திட்டங்களுக்கான நிதி சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டது.தொடர்ந்து, 193வது வார்டுக்கு உட்பட்ட துரைப்பாக்கம் பகுதிஆனந்தா நகர் மற்றும் விநாயகாபிரதான சாலையில் பல்வேறு திட்டநிதிகளின்கீழ் ரூ.58 கோடியே 25லட்சத்தில் 512 சாலைகள் அமைக்கும் பணிகளையும் தொடங்கி வைத்தார். சோழிங்கநல்லூர் மண்டலம், 200வது வார்டுக்கு உட்பட்ட செம்மஞ்சேரியில் ரூ.1 கோடியே 45 லட்சத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நவீன எரிவாயு தகன மேடையையும் பார்வையிட்டார்.இந்நிகழ்ச்சிகளில், மேயர் ஆர்.பிரியா, தென்சென்னை எம்.பிதமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் எம்எல்ஏ எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், தெற்கு வட்டார துணை ஆணையர் எம்.பி.அமித் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# ரவுடி 'கருக்கா' வினோத்தை ஜாமீனில் எடுத்த பாஜக பிரமுகர்: அமைச்சர் ரகுபதி தகவல்

தமிழக சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் தெரிவித்திருப்பதாவது:

ஆளுநர் மாளிகை நுழைவாயில் முன்பாக பெட்ரோல் குண்டு வீசிய சம்பவத்தில் ஈடுபட்ட வினோத் என்ற கருக்கா வினோத் மீது ஏற்கெனவே பல வழக்குகள் உள்ளன. இவரை ஏற்கெனவே சிறையில் இருந்து ஜாமீனில் எடுத்த வழக்கறிஞர் பாஜகவில் இருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.



ஏற்கெனவே பாஜக அலுவலகம் முன்பு இதேபோல தாக்குதல் நடத்திய கருக்கா வினோத்தை பாஜக வழக்கறிஞரே பிணையில் எடுத்து இருப்பது வேறொரு சந்தேகத்தையும் கிளப்புகிறது. இந்த கோணத்திலும் தமிழக காவல்துறை தனது விசாரணையை விரிவுபடுத்தி இருக்கிறது.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1071



## கந்தளாய் சிவன்கோவில் திருகோணமலை

*" அல்லல் என்செயும் அருவினை என்செயும்*
*தொல்லை வல்வினை தொந்தந்தானென் செயும்*
*தில்லை மாநகர் சிற்றம்பலவனார்க்கு*
*எல்லையில்லாதோர் அடிமை பூண்டேனுக்கே. "*

வரலாற்றுப் புகழ்மிக்க கந்தளதய் பிரதேசத்தில் ஆலயங்கள் அமைந்திருந்து காலகதியில் மறைந்துள்ள செய்தி வெளிப்பட்டது. ஆய்வாளர்கள், புதைபொருளாராச்சியாளர்கள் இப்பகுதியில் கவனம் செலுத்த ஆரம்பித்தபோது, பல உண்மைகள் வெளிப்பட்டன. இவர்களுடைய கூற்றுக்கள், இப்பிரதேசத்திலே சோழர்களால் அமைக்கப்பட்ட மிகப் பெரியசிவாலயம் ஒன்று அமைந்திருந்த - தென்பதை உறுதி செய்தது.

கி.பி 993 ஆம் ஆண்டு சோழர், முழு இலங்கையையும் கைப்பற்றி பொலநறுவையை இராசதானியாகக் கொண்டு ஆட்சி செய்தனர். இவர்களது காலத்திலே பொலநறுவை, சனநாதபுரம் எனப் பெயர் பெற்றது. சோழர்ஆட்சிக்காலத்தில் தழிழீழப்பகுதிகள், மற்றும் பொலநறுவை, அனுராதபுரம் போன்ற பல இடங்களிலும் சிவாலயங்கள் அமைக்கப்பட்டன. சோழ அரசர்கள் தமது வழிபாட்டிற்கென அமைக்கப்பட்ட இவ்வாலயங்கள், பிற்காலத்தில் பொதுமக்கள் சென்று வணங்கும் ஆலயங்களாகவும் மாற்றம் பெற்றன. இச்சிவாலயங்கள் சிற்பவேலைப்பாடுகளைக்கொண்ட மிகப் பெரிய கோவில்களாகத் திகழ்ந்த ஆலயங்களை, சோழர்களின் பின் ஆட்சிக்கு வந்தோர், சோழர்களால் கட்டப்பட்ட சிவாலங்களைப் பராமரிக்க முன்வரவில்லை. மாறாக இவ்வாறான ஆலயங்களைப் புத்தமத விகாரைகளாக மாற்றி அமைத்தனர். அத்தோடு சோழர்களுடைய கட்டிடங்கள் யாவும், பிற தேவைகளுக்காக அக்கால ஆட்சியாளர்களால் பயன் படுத்தப்பட்டது.

இலங்கையைச் சோழர் ஆட்சி செய்தகாலம், ஈழத்தமிழர்களுடைய பொற்காலமாகக் கருதப்படுகின்றது. சோழர் ஆட்சிக்காலத்தில் தமிழும், சைவமும் தழைத்தோங்க வழிசெய்தனர். பராந்தகன் என்னும் சோழமன்னன் ஈழத்தைக் கைப்பற்றியதால், "மதுரையும் ஈழமும்" கொண்டவன் என்ற பட்டத்தைப் பெற்றுள்ளான். இராசேந்திரதேவன் என்பவன் இலங்கையைக் கைப்பற்றி, சோழ மண்டலத்தின் ஒரு பகுதியாக்கி, இலங்கைக்கு மும்முடிச்சோழமண்டலம் எனப் பெயரிட்டான். சோழர் இலங்கையை 126 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். இந்தியாவிலே சோழர்கள் மகோன்னத நிலையிலே இருந்த காலத்தில், அவர்கள் செல்வாக்கு இலங்கையிலும் பரவியிருந்துள்ளது.

பொலநறுவை, திருகோணமலை, கந்தளாய், திருக்கரசை போன்ற இடங்களில் சோழப் பேரரசின் செல்வாக்கினால் சிவன்கோயில்கள் கட்டப்பட்டன. கி.பி 1010 ஆம் ஆண்டு, இராசேந்திர சோழமன்னன் கந்தளாய் சிவன்கோவிலைக் கட்டினான். மிகப் பெரிய சரித்திர வரலாற்றைக் கொண்ட கந்தளாய் சிவன்கோவில், தமிழர்களின் வரலாற்றையும், சைவசமயத்தின் பண்டைப் பெருமைகளையும், பிராமணக் குடியிருப்புக்களின் தொன்மைகளையும் நினைவுபடுத்துவதாகக் காணப்படுகின்றது. கந்தளாய் பிரதேசம் திருக்கோணேஸ்வரத்தோடு தொடர்புகொண்ட பிரதேசமாக விளங்கிய காரணத்தாலும், தமிழரின் செல்வாக்கு மேலோங்கிக் காணப்பட்டமையாலும் அக்காலத்திலே தமிழர் பின்பற்றிய சைவாலயங்கள் கந்தளாயில் பரந்து காணப்பட்டுள்ளன.

சோழர்களால் கட்டப்பட்டு பராமரிப்பின்றி அழிந்து போன ஆலயங்களுள் ஒன்றாகக் கந்தளாய் சிவன்கோயில் காணப்படுகின்றது. கந்தளாய் பிரதேசத்தில் பல ஆலயங்கள் இவ்வாறான நிலையில் காணப்படுகின்றன. கந்தளாயில் போட்டங்காடு என்னுமிடத்திலுள்ள சிவன்கோயிலின் கருங்கற் திருப்பணிச் சிதைவுகளும், திருவுருவங்களும் மண்ணிலே புதைந்தும் புதையாமலும் காட்சியளிக்கின்றன.

குடியேற்றத் திட்டங்களைக் கருத்திற்கொண்ட அரசு, காடுகளை அழித்தபோது, 1952 ஆம் ஆண்டு கந்தளாய் சிவன்கோவில் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது கிடைத்த கருங்கற் திருவுருவங்கள் அழிக்கப்பட்டு மறைக்கப்பட்டுவிட்டன. ஆயினும் அத்திவாரத்தோடு மறைக்க முடியாத காரணத்தினால் பின்னமடைந்த திருவுருவங்கள் மீட்கப்பட்டன. இரண்டு சிவலிங்கங்கள், இரண்டு ஆவுடையார் இவற்றோடு சிவன் பார்வதி சிலைகளின் சிதைந்த பாகங்கள், பீடங்கள், பின்னமடைந்த நந்தி, கருங்கற்தூண்கள், படிக்கற்கள், நிலைகள், ஆசனக்கற்கள், என்பன இராசேந்திரசோழனால் கட்டப்பட்ட கந்தளாய் சிவன்கோயிலின் வரலாற்றை எடுத்தியம்புவனவாகக் காணப்பட்டன.

சோழராட்சிச்காலத்திலே பல கற்சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. இச்சாசனங்களின்மூலம் பல விடயங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம். இராசேந்திரசோழனால் கட்டப்பட்டு அழிந்துபோன ஆலயத்தின் சிதைவுகளில், இரண்டு கற்சாசனங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சாசனத்திலே கந்தளாய் சிவன்கோயிலின் வரலாறு, பதினோராம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழர்களின் செல்வாக்கு, ஆகியன தெளிவாகவும், விரிவாகவும் கூறப்பட்டுள்ளது. அக்காலத்திலே ஆட்சி செய்த நிசங்கமல்லன் என்னும் அரசன் தன்னாட்சியை, கந்தளாய் பிரதேசத்திலே நிறுவ பிராமணக் குடியேற்றங்கள் தடையாகக் காணப்பட்டுள்ளது என்ற குறிப்பினையும், தமிழரின் செல்வாக்கு வலுப்பெற்றிருந்ததென்பதையும் கற்சாசனங்கள் தெரிவித்துள்ளன.

**- வளரும்...**

ERAA PLAZA
5928 FINCH AVE EAST
SCARBOROUGH, M1B5P8
(647) 295-9299
value mobile
NEW TO CANADA?
COME SEE US TODAY FOR AMAZING DEALS ON PHONE & PLANS!
5G ROGERS INFINITE
$42 PLUS TAX PER MONTH
தமிழில் உரையாடி உங்களுக்கான தேவைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்
30GB DATA
UNLIMITED CANADA-WIDE WITH US CALLING
UNLIMITED CANADA & US TEXT & VIDEO MESSAGING
BRING YOUR OWN DEVICE OR GET A PHONE FROM US

# அன்பின் தொனி - 710

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**தேவனை மகிமைப்படுத்தல்**

ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம், பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம், ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம், மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்றுகர்த்தர் சொல்லுகிறார், இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்றுகர்த்தர் சொல்லுகிறார்.
**- எரேமியா 9: 23-24**

நீ உண்மையோடும், நியாயத்தோடும், நீதியோடும், கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு ஆணையிடுவாய், புறஜாதிகளும் அவருக்குள் ஆசீர்வதிக்கப்பட்டு, அவருக்குள் மேன்மை பாராட்டுவார்கள்.
**- எரேமியா 4: 2**

ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்.
**- சங்கீதம் 50: 15**

ஆண்டவரே, நீர் உண்டாக்கின எல்லா ஜாதிகளும் வந்து, உமக்கு முன்பாகப் பணிந்து, உமது நாமத்தை மகிமைப்படுத்துவார்கள்.
**- சங்கீதம் 86: 9**

என் தேவனாகிய ஆண்டவரே உம்மை என் முழு இருதயத்தோடும் துதித்து, உமது நாமத்தை என்றென்றைக்கும் மகிமைப்படுத்து வேன்.
**- சங்கீதம் 86: 12**

ஜனங்களின் வம்சங்களே கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள் கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள்.
**- 1 நாளாகமம் 16: 28**

நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏக சிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வாராக. ஆதலால் தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்.
**- ரோமர் 15: 5-7**

உள்ளவைகளைஅவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்.
**- 1 கொரிந்தியர் 1: 28-31**

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.
**- 1 கொரிந்தியர் 6: 20**

ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.
**- 1 கொரிந்தியர் 10: 31**

மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டக்கடவன். தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்.
**- 2 கொரிந்தியர் 10: 17-18**

புற ஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் வி'யத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.
**- 1 பேதுரு 2: 12**

கர்த்தாவே, யார் உமக்குப் பயப்படாமலும், உமது நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம்? தேவரீர் ஒருவரே பரிசுத்தர், எல்லா ஜாதிகளும் வந்து உமக்குமுன்பாகத் தொழுது கொள்வார்கள், உம்முடைய நீதியான செயல்கள் வெளியரங்கமாயின என்றார்கள்.
**- வெளிப்படுத்தல் 15: 4**

**தொடரும்...**

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் விருதுவிழா – 2023

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் கனடா வாழ் தமிழ்ப் படைப்பாளிகளை கௌரவிக்கும் விருதுவிழா - 2023 எதிர்வரும் ஒக்டோபர் 28ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கனடாவில் கடந்த 30 வருடங்களாக இயங்கி வரும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம், எதிர்வரும் ஒக்டோபர் 28, 2023 சனிக்கிழமை காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் (Scarborough Civic Centre Auditorium, 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7) விருதுவிழா - 2023 நிகழ்வினை நடத்தவுள்ளது.

இந்த நிகழ்வில் கனடாவில் வாழ்ந்து வரும் மூத்த எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள். அறிஞர் என தெரிவு செய்யப்பெற்றுள்ள பத்து பேர் "வாழ்நாள் சாதனை" விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போதையை நிர்வாக சபையில் தலைவராக அகணி சுரேஸ் அவர்களும் செயலாளராக கமலவதனா சுந்தா அவர்களும் பொருளாளராக அருட்கவி ஞானகணேசன் அவர்களும் பணியாற்றுகின்றார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

விருதுவிழா - 2023

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்

நிகழ்ச்சி நிரல் (28-10-2023)

காலை 9:30 மணி - 9:50 மணி வரை - தேநீர் , சிற்றுண்டி வழங்கல்

காலை - 10:00 மணி முதல் பிற்பகல் 2:00 மணி வரை

கனடாப்பண்

தமிழ்த்தாய் வாழ்த்து

அமைதி வணக்கம்

Land Acknowledgement Statement

வரவேற்புரை - திரு குரு அரவிந்தன் துணைத்தலைவர்

வரவேற்பு நடனம்

தலைமையுரை - அகணி சுரேஸ்

உரை - திரு ஆர் என் லோகேந்திரலிங்கம் - கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின்- கடந்து வந்த பாதை

விருது விழா மலர் கையளிப்பு

*விருது வழங்கல் நிகழ்வு*

- *அறிமுக உரை*
- *மதிப்பளிப்பு (பொன்னாடை)*
- *விருது வழங்கல்*
- *சான்றிதழ் வழங்கல்*
- *விருதாளரின் ஏற்புரை*

*(இந்த ஒழுங்கில் பத்து விருதாளர்களுக்கும் விருது வழங்கல் நிகழ்வு நடைபெறும்.)*

நன்றியுரை - திருமதி கமலவதனா சுந்தா (செயலாளர்)

Appreciation to Performers/Sponsors/Media/Volunteers

மதிய போசனம்

நிறைவு



# இவ்வார ராசிபலன்

**27-10-2023 வெள்ளி தொடக்கம் 02-11-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** வீரியத்தோடு செயல்படும் வாரம். காதல் கை கூடும். சுபச்செய்திகள் இல்லம் தேடி வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. தொழில் முன்னேற்றம் தரும். தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். பெண்களுக்கு அணிகலன் சேரும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப்போடவும். பெரியோர்களின் ஆதரவு கிட்டும். ஆணவத்தை தவிர்ப்பது நல்லது. பயணத்தால் வெகுமதி கிடைக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். முடிவுகளில் தெளிவு இருக்கும். திறமைகள் வெளிப்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் தொடரும். புதிய நட்பு உருவாகும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். நல்ல நேரத்தையும், நன்மையான காலத்தையும் உண்மையாக சந்திக்கக்கூடிய காலம். மௌன விரதம் இருப்பது நல்லது. தொடுத்த வெற்றியை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தட்ஷிணாமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,F




**ரிஷபம்:** பிரபல்யம் கிடைக்கும் வாரம். ஆதாயம் மிகுதியாகும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. உத்தியோக உயர்வு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. அத்தியாவசிய செலவு அதிகமாகும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். ஏராள நன்மைகள் அதிகரிக்கும். கோபத்தையும், வேகத்தையும் தவிர்த்து லாபத்தை அடையும் காலம். எதிரிகள் தொல்லைகள் குறையும். தனவரவு அதிகரிக்கும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். ஆன்மீக சிந்தனைகள் அதிகமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். காசு, பணம் சேர்க்கை அதிகரிக்கும். பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகும். பொது வாழ்வில் புகழ் கூடும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பிள்ளைகளால் பெருமை சேரும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். ஏற்றங்கள் அதிகரிக்கும் காலம். பரபரப்பே இல்லாமல் பணவரவு பெருகும். மங்கல செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். ஆதாயம் பெருகக்கூடிய காலம். கல்வியால் செலவு ஏற்படும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குதூகலம் தழைத்தோங்கும். நிலம் வாங்கம் யோகம் உண்டு. வளம் பெருகும். உடல்நலம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 6,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,A




**மிதுனம்:** உழைப்பால் மதிப்பு சேரும் வாரம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். கூட்டுத்தொழில் கவனம் தேவை. உறவினரால் செலவு உண்டு. நன்மதிப்பு பெருகும். பாராட்டுக்கள் கூடும். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சியைத் தள்ளிப் போடவும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். பாக்கியங்கள் அதிகரிக்கும். கசந்த காலம் விலகும். வசந்த காலம் உருவாகும். வலிமையான காலமாக அமையும். மாற்று எண்ணம் உதயமாகும். தோற்றப்பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவிகள் சேரும். பொதுபணியில் ஆர்வம் கூடும். சுப காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்புத்தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டுக் கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பயணம் நன்மைத் தரும். அச்சத்தைத் தவிர்ப்பது நல்லது. உச்சத்தை அடையும் காலம் ஏற்படும். ஆன்றோர்கள் வாழ்த்துக் கிட்டும். வியாபார வளர்ச்சி உண்டு. கொடுக்கல், வாங்கலில் பிரச்சனை ஏற்படும். உறவினரால் தொல்லை ஏற்படும். கொள்கையில் பிடிப்பு சேரும். உடல் உபாதை தீரும். பொறுப்புக்கள் கூடும். வருமானம் சேரும். சாதனை நிகழ்த்தக்கூடிய காலம். மேன்மைகள் அதிக அளவில் பெருகும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 9,7,5,3
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,X




**கடகம்:** சவாலான விஷயங்களை சமாளிக்கும் வாரம். சினத்தை தவிர்ப்பது நல்லது. பணச்சேர்க்கை உண்டு. புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு ஏற்படும். மன சந்தோஷம் கூடும். மருத்துவச் செலவு கூடும். அனுகூலமான போக்கு நிலவி வரும். காரிய அனுகூலம் தரும். கடனால் பிரச்சனை வரும். விவசாயம் விளைச்சல் தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வெற்றி கிடைக்கக்கூடிய காலம். நல்லவராக இருப்பீர்கள். வல்லவராக வாழ விரும்புவீர்கள். கனவுகள் நிறைவேறும். ஆசைகள் பூர்த்தியாகும். தகுதியோடும், மிகுதியோடும் வாழக்கூடிய காலமாக அமையும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விளைச்சல் அதிகமாகும். விவசாயம் மேன்மை பெறும். வெளியூர் பயணம் ஏற்படும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். பூர்வீக சொத்து சேரும். அந்தஸ்து கூடும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. குதூகலம் சேரும். வியாபாரம் உயரும். வில்லங்கம் விலகும். தீய எண்ணம் விலகும். உடன் பிறப்புக்கள் தொல்லை தருவர். திடீர் தனவரவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். மரியாதையான குணம் அதிகரிக்கும். இனிய நட்புக்கள் உருவாகும். பெரிய வெற்றி கிடைக்கும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அரசியலில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,K




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** எதிர்பார்த்த வளர்ச்சி கிடைக்கும் வாரம். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். ஆரோக்கியம் கூடும். தர்மச் சிந்தனையும் மேலோங்கும். வெற்றிகள் குவியும். எதிரிகள் உதிரியாவார்கள். கல்விச் சலுகைகள் கிட்டும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி உண்டு. தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். உத்தியோகம் திருப்தி தரும். பணி மாற்றம் ஏற்படும். சிறியவர் முதல் பெரியவர் வரை சிறப்புக்களை சந்திப்பார்கள். கஷ்ட காலங்கள் விலகும் காலம். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். திடீர் வரவுகள் உண்டு. ஆபரணங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்துக்கள் சேரும். கல்வித்துறையில் உள்ளவர்களுக்கு கைமேல் பலன் கிடைக்கும். நிதி பற்றாக்குறை நீங்கும். கடன் பிரச்சனை தீர்வுக்கு வரும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். மங்களச்செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். காரிய வெற்றி கிடைக்கும். இளமையோடும், பெருமையோடும் காட்சியளிப்பீர்கள். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் தரும். புதிய வாகனம் வாங்குவீர்கள். கடமையில் தடங்கல் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். முதலீடுகளை தவிர்க்கவும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிட்டும். கணவன், மனைவி ஒற்றுமை அதிகரிக்கும். நன்மைகள் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 4,7,9,2
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,P




**கன்னி:** நினைத்தது நடக்கும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். மகிழ்ச்சியான நிகழ்வுகள் நடக்கும். கலை ஆர்வம் பெருகும். உடல் உஷ்ணம் உண்டாகும். விபரீத போக்கு மாறும். பூர்வீக சொத்து வந்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. இயந்திர பணியில் நிதானம் தேவை. குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். துன்பங்கள் விலகும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கற்பனைத் திறன் அதிகரிக்கும். கஷ்ட காலங்கள் விலகி அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். பூர்வீக சொத்து கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதாரியால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி வரும். விவசாயம் லாபம் தரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. முயற்சிகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் வசூலாகும். பொருளாதாரம் வளர்ச்சி பெருகும். மிகையான நன்மை கிடைக்கும். ஆறு வகையான செல்வங்கள் அமைதியாக கிடைக்கும் காலம். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடன்பிறந்தவரால் ஆதாயம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**துலாம்:** இல்லம் வளர்ச்சி அடையும். கலையான தோற்றமும், கனிவான பேச்சும் அவசியம். தெளிவான சிந்தனையால் மலிவான நட்புக்கள் விலகும். தந்தையால் நலம் குறையும். மாணவர் திறமை பளிச்சிடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத்திறமை அதிகரிக்கும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக்கடன் ஒழியும். இடமாற்றம் நன்மை தரும். சாதனைகள் நிகழும் காலம். பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல்வலி வந்து போகும். தாய்வழி உறவு நன்மை தரும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் நன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. பூர்வீக சொத்துக்களால் லாபம் உண்டு. சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அகலும். புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். இழந்த கௌரவம் திரும்ப கிடைக்கும். பெருமைகள் கூடும். வறுமைகள் விலகும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குழந்தைகள் நலத்தில் கவனம் தேவை. இனிய வாய்ப்புக்கள் கிடைக்கும். திருமகள் கிருபைகள் உண்டு. தெய்வ கடாட்ஷம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். விவாத முயற்சி வெற்றி தரும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கைப்பொருள் களவுப்போகும். விவசாயம் லாபம் தரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அலமேலுமங்கை, அதிர்ஷ்ட எண்: 1,4,5,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,Z




**விருச்சிகம்:** மரியாதை உயரும் வாரம். நடுத்தரமான நன்மைகள் அடுத்தடுத்து கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். திடீர் செலவு ஏற்படும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டாகும். கலைத்தொழிலில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். வெகுமதிகள் சேரும். உடல்நிலையில் அக்கறை தேவை. சினம் தவிர்ப்பது நல்லது. பிள்ளைகளால் நல்ல செய்திகள் வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் கலை கட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைவழி தொல்லை தீரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. திருப்பங்கள் நிறைந்த வாரம். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். உத்தியோக இடமாற்றம் உண்டு. கர்ஜனையோடு வலம் வரக்கூடிய காலம். பக்கத்து வீட்டு பகை மாறும். உடல்சோர்வு ஏற்படும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அஷ்டலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,H

(தொடர்ச்சி 22 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(21 பக்கம் தொடர்ச்சி)




**தனுசு:** பிரயாணம் பெருமை தரும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர்கள் ஆலோசனை பயன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். திட்டமிட்ட காரியம் ஜெயமாகும். குடும்ப மேன்மை அதிகரிக்கும். கட்டுமானப் பணியில் உள்ளவர்களுக்கு கௌரவம் அதிகரிக்கும். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக் கடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். பூர்வீகச் சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நன்மைகள் அதிகரிக்கும் காலம். பணவரவு அதிகரிக்கும். தனித்து நின்று ஜெயித்துக் காட்டும் அற்புதமான காலம். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்புக் கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். இன்னல்கள் அகலும். குடும்ப தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மன சஞ்சலம் குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கல்வியில் மந்த நிலை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனலட்சுமி, அதிர்ஷ்ட எண்: 7,2,4,8

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**மகரம்:** உன்னதம் நிறைந்த வாரம். உலோகத்தொழில் உயர்வு தரும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பயணம் லாபம் தரும். எண்ணிய காரியம் கைகூடும். ஏற்றங்கள் அதிகரிக்கும். எதார்த்தமான சிந்தனையில் ஏறுமுகம் காணக்கூடிய ஆறுதலான காலமாக அமையும். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைவாற்றல் பெருகும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை கூடும். தன்னம்பிக்கை கூடும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. எடுத்த காரியத்தில் ஏற்றம் கிட்டும். படித்த கல்விக்கு உத்தியோகம் கிடைக்கும். உபயோகமான காலம். புதிய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்ப்பார்ப்புக்கள் குறையும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பூமி சேர்க்கையுண்டு. ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அதிகாரம் உயரும். எதிர்பார்த்த வரவுகள் கிடைக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,2


அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,G




**கும்பம்:** வம்பு தும்புகள் ஒழியும் வாரம். மகிழ்வான நிகழ்வுகளை சந்திக்கக்கூடிய சந்தோஷமான காலம். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டு கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகரிக்கும். எண்ணிய காரியம் கைகூடும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். கஷ்ட காலம் விலகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். மன உற்சாகம் அதிகரிக்கும். வாகன அபிவிருத்தி ஏற்படும். வழக்குகளால் தொல்லை உண்டு. இயந்திர தொழிலால் லாபம் உண்டு. கடன் தொல்லைகள் குறையும். கூட்டுப் பிரார்த்தனையில் மோசடி ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். புண்ணிய ஸ்தலப் பயணம் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நல்லோர் நட்பு கிட்டும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். உடன் பிறந்தவரால் சலசலப்பு ஏற்படும். கணவன், மனைவி கருத்து வேறுபாடுகள் அகலும். நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். சிறப்புக்கள் சேரும். தன்மானத்தோடு வாழும் காலம். தயாள குணம் மேலோங்கும். போட்டி, பொறாமைகள் விலகி நன்மைகள் பெருகும். வீரியத்தோடு செயல்படுவீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ஹரித்துவார், அதிர்ஷ்ட எண்: 2,9,4,6

அதிர்ஷ்ட நிறம்: கருநீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,R




**மீனம்:** பணிவான பேச்சு அவசியம் தரும் வாரம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். கனத்த வருமானத்தை ஈர்த்துக் கொள்ளும் காலம். அறிவாற்றல் பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும். புதிய பதவி வாய்ப்பு வரும். பணியில் உயர்வு உண்டு. பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். மனோபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும். கமிஷன் தொழில் லாபம் தரும். சுபகாரியம் கைகூடும். சொத்துச் சேர்க்கை உண்டு. அறிமுகம் இல்லாதவர்கள் மூலமாக ஆதாயம் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். செல்வமும், புகழும் சேரும். பணியில் கண்டிப்பு அவசியம். கல்விச்செலவு கூடும். வழக்கு முடிவிற்கு வரும். பக்குவமான பேச்சு அவசியம். வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. மிகையான நன்மை கிடைக்கக் கூடிய மிக அற்புதமான காலம். மரபை மீறிப் பேசிய உறவுகள் மனதாரப் பாராட்டும் காலம். நல்லோர்களின் வாழ்த்துக் கிட்டும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். தாய் வழி உறவில் ஆதாயம் உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,V

## Relaxation of Visa Under Certain Categories for Canadian Nationals from 26th Oct. 2023

## கனடியர்களுக்கான விசா சேவைகளை மீண்டும் தொடங்க கனடாவில் இயங்கும் இந்திய தூதரங்கள் ஏற்பாடு

கனடாவின் ஒட்டாவாவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் அதன் துணைத் தூதரகங்களாக விளங்கும் ரொறன்ரோ மற்றும் வான்கூவர் ஆகிய அலுவலகங்களில் விசா சேவைகளை தற்காலிகமாக நிறுத்திவைக்க முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பரிசீலனைகள் மற்றும் கனடியர்களின் பிரயாணத் தேவைகள் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொண்டு பாதுகாப்பு நிலைமையை பரிசீலித்த பிறகு இது தொடர்பாக கனடாவின் சமீபத்திய நடவடிக்கைகள் ஆகியவற்றையும் கவனத்தில் எடுத்து தற்போது கனடியர்களுக்கான விசா சேவைகளை மீண்டும் தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அக்டோபர் 26, 2023 முதல் அமுலுக்கு வரும் பின்வரும் விசா வகைகள்:

(அ) நுழைவு விசா
(ஆ) வணிக விசா
(உ) மருத்துவ விசா, மற்றும்
(ஈ) மாநாட்டு விசா

எனினும் அவசரநிலைகள் உயர் ஸ்தானிகராலயத்தால் தொடர்ந்து கவனிக்கப்படும் என்றும், மேலும் மாற்றங்கள் செய்யப்படின் அவை பற்றியும் தெரிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது.



High Commission of India
Ottawa

**Press Release**

The High Commission of India in Ottawa, Canada and its Consulates General in Toronto and Vancouver were constrained to suspend visa services temporarily because of safety and security considerations.

After a considered review of the security situation that takes into account some recent Canadian measures in this regard, it has been decided to resume visa services for the following categories with effect from October 26, 2023:

(a) Entry Visa
(b) Business Visa
(c) Medical Visa, and
(d) Conference Visa

Emergency situations will continue to be addressed by the High Commission and the Consulates General as it is being done currently.

Further decisions, as appropriate, would be intimated based on continuing evaluation of the situation.

**October 25, 2023**
**Ottawa, Canada**

10, Springfield Road, Ottawa, Ontario, K1M 1C9
Tel : [illegible]
Website : www.hciottawa.gov.in

## கனடாவில் தமிழ்க் கவிஞர் கழகத்தின் "கவிச்சரம்" இதழ் வெளியீட்டு விழா

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் தனது கவிச்சரம் இதழை எதிர்வரும் 2023-11-05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெளியிடவுள்ளது.



# MORTGAGE FINANCIAL

## "Navigating Home Loans, Guiding You Home"



Contact me today



RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL

VACANT LAND CONSTRUCTION

**NESAN** Subramaniam **416-908-5656**

| 1st & 2nd Mortgages | Purchase | Refinance

| Renewal | Switches | Equity line of Credit

| Pre-approvals | Self-employed | Multi-rental properties

| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank

TD Canada Trust

RFA

FIRST NATIONAL FINANCIAL LP

MCAP

HOME TRUST

EQUITABLE BANK

radius financial

RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

மொன்றியல் நகரில் உதயன் விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8 Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்... 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எம்மை அழையுங்கள்
416-752-1524

உதயம் 1438 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 27, 2023

# தமிழ்நாட்டு முகாம்களில் "நாடற்றவர்களாக" இருப்பவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப் பரிந்துரை



இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு சென்று, அங்கு அகதிகள் முகாம்களில் "நாடற்றவர்களாக" இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு, தமிழக அரசின் உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை இந்திய மத்திய அரசு சாதகமாகப் பரிசீலித்தால், இந்திய குடியுரிமைக் கிடைக்க வாய்ப்புகள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ்நாடு அரசு அமைத்த உயர்மட்ட குழுவின் பரிந்துரை, கடந்த ஞாயிற்றுக்கிழமை (22) அன்று கோயமுத்தூரில் "மலையகம் 200" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கோயமுத்தூரில் அந்த மாநாட்டின் போது, அந்த உயர்மட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினரான பேராசிரியர். இரா. இளம்பரிதி இதை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். "இலங்கை தமிழர்களின் நலன்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் உயர்மட்டக் குழு தனது இடைக்கால அறிக்கையில் தமிழக முகாம்களில் நாடற்றவர்களாக உள்ளவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவதற்கு பரிந்துரை செய்துள்ளது".

(உள்ளே செய்தியும் மேலும் படங்களும் 10ம் பக்கத்தில்)

# உலகின் வெவ்வேறான பகுதிகளில் அதிகரித்து வரும் வன்முறைக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கவுள்ள சமாதானத்துக்கான உலகளாவிய இயக்கம்

சமாதானம் மற்றும் நீதிக்கான புதிய நெறிமுறைகள் மற்றும்பொறிமுறைகளுக்கான உலகளாவிய இயக்கமொன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

அண்மைய காலங்களில் உலகின் வெவ்வேறான பகுதிகளில் அதிகரித்து வரும் வன்முறை முரண்பாடுகளின் அதிகரிப்புக்கு மத்தியில் நீதியுடன் சமாதானத்துக்கான உலகளாவியஇயக்கமொன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்முன்னெடுக்கவுள்ளது.. முழு உலகிற்கும் கற்பனை செய்து பார்க்க முடியாத பின்விளைவுகளுடன் இஸ்ரேலிய-பலஸ்தீன முரண்பாடானதுமத்திய கிழக்கு பிராந்தியம் முழுவதும் பரவும் ஆபத்துக்காரணமாக சமாதானத்துக்கும் நீதிக்குமான இவ்வாறானஉலகளாவிய முயற்சி மிகவும் அவசியமாக இன்றுதேவைப்படுகிறது.

# Relaxation of Visa under certain categories for Canadian Nationals from Oct. 26, 2023



# கனடியர்களுக்கான விசா சேவைகளை மீண்டும் தொடங்க கனடாவில் இயங்கும் இந்திய தூதரங்கள் ஏற்பாடு

கனடாவின் ஒட்டாவாவில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் அதன் துணைத் தூதரகங்களாக விளங்கும் ரொறன்ரோ மற்றும் வான்கூவர் ஆகிய அலுவலகங்களில் விசா சேவைகளை தற்காலிகமாக நிறுத்திவைக்க முன்னர் தடை விதிக்கப்பட்டிருந்தது.

(உள்ளே விபரமான செய்தி 22ம் பக்கத்தில்)

# கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் விருதுவிழா – 2023

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் நடத்தும் கனடா வாழ் தமிழ்ப் படைப்பாளிகளை கௌரவிக்கும் விருதுவிழா-2023 எதிர்வரும் ஒக்டோபர் 28ம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

கனடாவில் கடந்த 30 வருடங்களாக இயங்கி வரும் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம், அன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் **(Scarborough Civic Centre Auditorium, 150 Borough Dr, Scarborough, ON M1P 4N7)** விருதுவிழா-2023 நிகழ்வினை நடத்தவுள்ளது

(உள்ளே விபரமான செய்தி 20ம் பக்கத்தில்)

# தமிழகம் செய்யத் தவறியதை ரொறன்ரோ "தமிழ் இலக்கிய தோட்டம்" தனது பணியாக மேற்கொண்டு வருகின்றது

## கனடா உரையரங்கில் தமிழகத்தின் நட்சத்திர எழுத்தாளர் ஜெயமோகன் புகழாரம்



"இந்த ரொறன்ரோ நகரத்திற்கு தனிச் சிறப்பும் உள்ளது. அது தமிழகத்துக்கு இல்லாத ஒரு தனிச் சிறப்பு. எமது மொழியின் முக்கிய படைப்பாளிகளை இனம் கண்டு இலக்கியத் தோட்டம் கௌரவித்து வருவது தனிச் சிறப்பாகும். தமிழகம் செய்யத் தவறியதை இலக்கிய தோட்டம் தனது பணியாக மேற்கொண்டு வருகின்றது. இந்தப் பணியினை பதிவிட வேண்டிய கடப்பாடு எனக்கு உள்ளது. ஏனெனில் இத்தகைய தொடர்ச்சியான கௌரவ நிகழ்வுகள் மிக அரிதாகவே நடைபெறுவதொன்றாகும். இவ்வேளையில் தமிழியல் விருது பெற்ற சுந்தரம் இராமசாமி வெங்கட் சுவாமிநாதன் போன்ற எனது முன்னோடிகளை நான் இங்கு நினைவு கூறுகின்றேன். தமிழகத்தில் கௌரவம் பெற வேண்டிய பல படைப்பாளிகள் தமக்குரிய கௌரவத்தைப் பெறாமலே மறைந்து போயுள்ளனர் என்ற ஆதங்கத்தையும் பகிர்ந்து கொள்வது கூட இங்கு அவசியமாகிறது"

(உள்ளே விபரமான செய்தி 4ம் பக்கத்தில்)

# ஈழத் மண்ணின் வீணை இசைக் கலைஞர் என். எஸ். வாசீகன் கனடாவில் அளிக்கும் முதலாவது மேடை நிகழ்ச்சி



எதிர்வரும் நவம்பர் 3ம் திகதி வெள்ளிக்கிழமையன்று "கனடாவின் "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மாலை 6.00 மணிக்கு ஸ்காபுறோவில் உள்ள சீனக் கலாச்சார நிலையத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ள வீணை இன்னிசை மாலை" நிகழ்ச்சியில் வீணை இசை மழை பொழியவுள்ளார்.

அவருக்கு பக்கவாத்திய இசை வழங்க கனடாவின் புகழ்பெற்ற இசைக்குழுவான "மெகா ரியுனர்ஸ்" குழுவினர் ஆயத்தமாக உள்ளனர். அத்துடன் கடுமையான பயிற்சியிலும் ஈடுபட்டுள்ளனர்.

(உள்ளே செய்தி 2ம் பக்கத்தில்)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan Broker
Homelife/Future Realty Inc., Brokerage
Joy H.Selvanayagam Broker